




PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 206 09.03.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 206 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(9–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–25
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி நள்ளிரவு 11.58 வரை பிறகு சப்தமி
நட்சத்திரம்:
விசாகம் மாலை 4.44 வரை பிறகு அனுஷம்
யோகம்
மரண/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி.
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி

மேஷம் ......................பக்தி
ரிஷபம்.................. லாபம்
மிதுனம் .................. பரிசு
கடகம்.................. இன்பம்
சிம்மம் .................. உறுதி
கன்னி ................ பாராட்டு
துலாம் ......................பரிவு
விருச்சிகம்...........மகிழ்ச்சி
தனுசு ................ உண்மை
மகரம் ....................வெற்றி
கும்பம்......................புகழ்
மீனம் ......................பணிவு

# “தன்னிறைவு பெற்றவர்களாக தமிழக மகளிரை உயர்த்துவோம்”

## முதல்வர் ஸ்டாலின் உறுதி



**சென்னை, மார்ச் 9:**

‘‘தன்னிறைவும், பொருளாதாரச் சுதந்திரமும், சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாகத் தமிழக மகளிரை உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம்” என்று மகளிர் தினத்தை ஒட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உலக மகளிர் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது: உலகை இயக்கும் பேராற்றலான என் அன்புக்குரிய தாய்மார்கள், சகோதரிகள் அனைவருக்கும் இனிய உலக மகளிர் நாள் வாழ்த்துகள்.“பெண் ஏன் அடிமையானாள்?” எனக் கேள்வியெழுப்பிவிழிப்புணர்வை ஏற்படுத்தினார் தந்தை பெரியார். அவரது கொள்கை வழித்தோன்றலாக மு.கருணாநிதி பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உரிமை அளித்துச் சட்டம் நிறைவேற்றினார்.

அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு அளித்தார். இத்தகைய பெண்ணினக் காவலர்களின் வழியிலான நமது திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியையே மகளிரின் உயர்வுக்கான ஆட்சியாக நடத்தி வருகிறது.

வெல்லும்தமிழ்ப்பெண்கள்: விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், புதுமைப்பெண், முதல்வரின் காலை உணவுத் திட்டம், தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட சதவீதம் பணியிட ஒதுக்கீடு, பெண்கள் பெயரில் சொத்துப்பதிவுக்கு பதிவுக்கட்டண சலுகை, 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாகக் கருப்பைவாய்ப் புற்றுநோய் தடுப்பூசி, ஆதிதிராவிட பழங்குடியினப் பெண்களுக்கான நன்னிலம் நிலவுடைமைத் திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்கள் வேலைவாய்ப்பு, பாதுகாப்புக்காக டிஎன்-விசேப் திட்டம், கிராமப் புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் டிஎன் ரைஸ் போன்ற எண்ணற்ற திட்டங்களால் திமுக ஆட்சியில் தமிழக மகளிர் வெல்லும் தமிழ்ப்பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர்.



அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத்தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என அறிவித்துள்ளோம். அத்துடன், 3 மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், ரூ.2 ஆயிரத்தை கோடைகால சிறப்பு நிதியாகவும் தமிழகம் முழுவதும் 1.31 கோடி மகளிர் வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம்.

தரமான கல்வியும், உயர் வேலைவாய்ப்புகளும் தன்னிறைவும், பொருளாதாரச் சுதந்திரமும், அனைத்துக்கும் மேலாக சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாகத் தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம்.

ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழகம் எனும் என் லட்சியக் கனவை முன்னின்று நிறைவேற்றப் போவது நீங்கள்தான். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது மகளிர் நாள் நல்வாழ்த்துகள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கமல்ஹாசன் மகளிர் தின வாழ்த்து

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில் கூறியிருப்பதாவது;-

“பெண்களுக்கு சம வாய்ப்புகளையும், சம அதிகாரத்தையும் பகிர்ந்தளிக்கையில் ஒட்டுமொத்த சமுதாயமும் வெற்றி பெறுகிறது. மகளிர் தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்டியிராத சமத்துவ உலகை உருவாக்குவோம். ஒவ்வொரு பெண்ணும் தனக்கான சிறகுகளைப் பெறுவதை உறுதி செய்வோம். பகிர்வோம், உயர்வோம்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘பெண்களுக்கு சமவாய்ப்புகள் வழங்கும் சமுதாயத்தை உருவாக்க உறுதியேற்போம்’



நாட்டில் உள்ள பெண்கள் அனைவருக்கும் இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு மகளி தின வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில் கூறியிருப்பதாவது;-

“அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துகள்! படித்த மற்றும் அதிகாரம் பெற்ற பெண்கள் ஒரு முற்போக்கான நாட்டின் தூண்கள் ஆவர். பெண் சக்தி பல்வேறு துறைகளில் தொடர்ந்து சிறந்து விளங்கி, தைரியத்துடன் வழிநடத்துவதோடு, சமூகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துகிறது.

இந்த சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு பெண்ணும் கண்ணியம், பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்துடன் வளரவும், வாழவும், சம வாய்ப்புகள் வழங்கும் ஒரு சமூகத்தை உருவாக்க நாம் உறுதியேற்போம். பெண்கள் தங்கள் விருப்பங்கள் மற்றும் சாதனைகள் மூலம் சமமான எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான சூழலை நாம் ஒன்றாக உருவாக்குவோம்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ‘பெண்களின் முன்னேற்றமே அரசின் பல்வேறு திட்டங்களுக்கு மையமாக உள்ளது’



நாட்டில் உள்ள பெண்கள் அனைவருக்கும் பிரதமர் மோடி மகளிர் தின வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில் கூறியிருப்பதாவது;-

ஒவ்வொரு துறையிலும், பெண்கள் இந்தியாவின் முன்னேற்றத்தை உறுதியுடனும், படைப்பாற்றலுடனும், ஒப்பிடமுடியாத வைராக்கியத்துடனும் வடிவமைக்கின்றனர். அவர்களின் சாதனைகள் நமது தேசத்தை ஊக்குவிக்கின்றன. மேலும் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நமது உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றன.

நமது நாட்டுப் பெண்களின் சாதனைகள் நம் பெருமைக்கு ஒரு ஆதாரமாகவும், தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்கள் கொண்டிருக்கும் பங்கின் சக்திவாய்ந்த நினைவூட்டலாகவும் உள்ளன. இந்தியா மேலும் முன்னேறும்போது, பெண்களின் விருப்பங்களும், பங்களிப்புகளும் ஒரு வலுவான மற்றும் வளமான தேசத்தை நோக்கிய நமது கூட்டுப் பயணத்தைத் தொடர்ந்து வழிநடத்தும்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி; அமித்ஷா நம்பிக்கை



**டேராடூன், மார்ச் 9:**

உத்தரகாண்ட் மாநிலத்தில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 200 பேருக்கு குடியுரிமை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.இதில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொண்டு குடியுரிமை சான்றிதழை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது,

சி.ஏ.ஏ. எனும் குடியுரிமை திருத்த சட்டத்தை பா.ஜனதா அரசு கொண்டு வந்தபோது காங்கிரஸ், சமாஜ்வாடி, பகுஜன் சமாஜ் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

உத்தரகாண்டில் சட்டவிரோதமாக குடியேறிய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பா.ஜனதா அரசால் வெளியேற்றப்பட்டனர். அவர்களை பாதுகாப்பதில் காங்கிரஸ் தனது முழு சக்தியையும் செலவிட்டது. வருகிற தேர்தலில் தமிழகம், மேற்கு வங்காளத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும். 2027-ம் ஆண்டில் உத்தரகாண்டில் 3-வது முறையாக பா.ஜனதா ஆட்சி அமைக்கும். இதன்மூலம் தேசிய ஜன நாயக கூட்டணியின் வெற்றிப்பயணம் தொடரும். கேதார்நாத் முதல் கன்னியாகுமரி வரை நாட்டில் இருந்து ஒவ்வொரு ஊடுருவல்காரரையும் மத்திய அரசு வெளியேற்றும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## தேர்தலுக்கு முன்னேற்பாடு: 211 துணை ராணுவப் படையினர் சென்னை வருகை

**புதுடெல்லி, மார்ச் 9:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை கடந்த பிப்.26-ம் தேதி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தமிழகத்துக்கு நேரில் வந்து, மாவட்ட ஆட்சியர்கள், எஸ்பிக்கள், ஐஜிக்கள், தலைமைச் செயலர், டிஜிபி, ஐடி, ஈடி அதிகாரிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள 234 தொகுதிக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்களை நியமித்த நிலையில், நேற்று முன்தினம் அவர்களுக்கும்,



தகவல் தொழில்நுட்ப உதவிப் பணியாளர் களுக்கும், தேர்தல் ஆணைய செயலிகளான இசிஐ நெட் (ECINET), இடிப்பிபிஎம்எஸ் (ETPBMS) பயன்பாடுகள், தேர்தல் நடத்தை விதிகள் கண்காணிப்பு, கட்டணச் செய்தி கண்காணிப்பு உள்ளிட்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே, தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை அமைதியாக நடத்தவும், தேர்தல் பாதுகாப்பாக நடத்தப்படுகிறது என்ற நம்பிக்கையை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையிலும், முதற்கட்டமாக துணை ராணுவப் படையின் 50 கம்பெனிகள் தமிழகத்துக்கு அனுப்பப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

அதனடிப்படையில், நேற்று 211 துணை ராணுவப் படையினர் சென்னை வந்தடைந்தனர். அவர்கள் சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மாநகராட்சி திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வரும் நாட்களில் தொடர்ந்து துணை ராணுவப்படையின் 50 கம்பெனிகளும் வரவுள்ளன. அப்படையினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பிரித்து அனுப்பப்பட உள்ளனர்.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சி வசம் 55 திருமண மண்டபங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேர்தலின்போது பாதுகாப்பு பணியில் ஈடுபடும் துணை ராணுவப் படையினர் தங்குவதற்காக இந்த மண்டலங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

அதனால் இந்த 55 திருமண மண்டபங்களின் முன்பதிவு, கடந்த பிப்.26 முதல் ஜூன் 15-ம் தேதி வரை முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்த பிறகு, மீண்டும் முன்பதிவு தொடங்கும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதே போன்று தமிழகத்தின் பிற மாநகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள திருமண மண்டபங்களிலும் முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

## மார்ச் முதல் வாரத்தில் வளைகுடா நாடுகளிலிருந்து 52,000 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்: மத்திய அரசு

**புதுடெல்லி, மார்ச் 9:**

மார்ச் முதல் வாரத்தில் வளைகுடா பிராந்தியத்திலிருந்து 52,000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தாயகம் திரும்பினர் என்று மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் கடந்த பிப். 28 அன்று ஈரானின் தலைமை மதகுரு ஆயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, கத்தார், பஹ்ரைன், குவைத் ஆகிய வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க தளங்களைக் குறிவைத்து ஈரானின் படைகள் தாக்கி வருவதால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், மார்ச் 1 – 7 வரையிலான காலகட்டத்தில், வளைகுடா மற்றும் மேற்காசிய பிராந்தியங்களிலிருந்து 52,000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்க எந்த நாட்டின் அனுமதியும் தேவையில்லை: அமெரிக்காவுக்கு மத்திய அரசு பதிலடி

**புதுடெல்லி, மார்ச் 9:**

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க எந்த நாட்டின் அனுமதியும் தேவையில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்து தடைபட்டு, உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை சுமார் 30 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது.

இந்தச் சூழலில், 30 நாட்களுக்கு ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருந்தார். இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், “ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதற்கு இந்



தியா ஒருபோதும் எந்த நாட்டின் அனுமதியையும் சார்ந்து இருந்ததில்லை” என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் “ஹார்முஸ் பாதையில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையிலும், இந்தியாவின் எரிசக்தி விநியோகம் பாதுகாப்பாகவும் சீராகவும் உள்ளது. இந்தியா தனது கச்சா எண்ணெய் ஆதாரங்களை 27 நாடுகளிலிருந்து 40 நாடுகளாக பன்முகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல மாற்று விநியோகப் பாதைகளை உறுதி செய்துள்ளது. தேசிய நலன் கருதி, எங்கெல்லாம் மிகவும் மலிவான விலையில் எண்ணெய் கிடைக்கிறதோ, அங்கிருந்து இந்தியா அதனை வாங்குகிறது” என கூறப்பட்டுள்ளது.





## ஸ்ரீ பெருமாள்- யோக நரசிம்மர் திருக்கோலம்



மேற்கு மாம்பலம் - ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீசெங்கமலவல்லி நாயிகா ஸமேத சென்ன ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் விசுவாவசு வருஷ மாசி ப்ரம்மோத்ஸவம் முதல் நாள் மாலை ஸ்ரீ பெருமாள்- யோக நரசிம்மர் திருக்கோலம்- பத்தி உலாத்தல் மற்றும் சிம்ம வாகனம் புறப்பாடு.

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**முசிறி மார்ச்09:**

ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் விநாயகப் பெருமானுக்கு சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,பன்னீர், இளநீர்,தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், அருகம்புல் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், பாட்டுக்கள் பாடி, வேத மந்திரங்கள் ஒலிக்க, மகா தீபாராதனையும் நடைபெற்றது . விநாயகப் பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# மானாமதுரை எம்ஏகே மகளீர் கலைக்கல்லூரியில் மகளீர் தின விழா

**சிவகங்கை, மார்ச் 09:**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள எம்.ஏ.கே. கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் உள்ள கலையரங்கில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது.

முதல்வர். முனைவர். இரா. நாகேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி தலைவர் ராஜகோபாலன் அய்யா வழிகாட்டுதல் படி நடைபெற்றது. மாணவி.தக்ஸின் சபீஹா வரவேற்புரையாற்றினார்.

மானாமதுரை அரசு மருத்துவமனை மனநல ஆலோசகர்.திருமதி ஆனந்தம் தன்னுடைய உரையில் மாணவிகள் தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

யோகா மற்றும் கராத்தே பயிற்சி பெற வேண்டியது அவசியம் என்று கூறினார். மகளிர் தின சிறப்பு விருந்தினராக மானாமதுரை அரசு மேல்நிலைப்பள்ளி மேனாள் உடற்கல்வி துறை ஆசிரியர் கலைச்செல்வி கலந்துகொண்டு மகளிர்தின சிறப்புரையாற்றினார் .

அவர் தம் உரையில் மகளிர் தினத்தின் முக்கியத்துவம் பற்றியும், பெற்றோர்களை பேணுதல்., மற்றும் வாழ்க்கையில் உயர்வதற்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தி பேசினார்.

பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மெடல் அணிவித்து ஊக்கமூட்டினார். கல்லூரி பேரவை தலைவி,.நூருல் இக்ஷானா நன்றி கூறினார்.

வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர். வீரலட்சுமி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். நாட்டுப்பண்ணுடன் நிறைவடைந்தது.

# கவிதை நூல் வெளியீடு

**தேனி, மார்ச் 09:**




தேனி மாவட்டம், வடுகபட்டி, அருட்பிரகாச வள்ளலார் திருக்கோயில் வளாகத்தில், வராகநதி தமிழ்ச் சங்கம் மற்றும் இகரமுதல்வி இதழ் இணைந்து நடத்திய, முப்பெரும் விழாவில் கவிஞர் அ. பாண்டியமகிழன் எழுதிய, 'முருகமலையை முத்தமிடும் மேகங்கள்' எனும் கவிதை நூலினைத் தேனி மாவட்ட வெற்றித் தமிழர் பேரவைத் தலைவர் வழக்கறிஞர் ஜி. கே. மணிகார்த்திக் அவர்கள் வெளியிட, நூலின் முதல் பிரதியினைத் தேனித் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும் எழுத்தாளருமான தேனி மு. சுப்பிரமணி பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வையைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் புலவர் ச. ந. இளங்குமரன், கவிஞர் ம. கவிக்கருப்பையா, கவிஞர் கூ. தங்கேஸ்வரன், கவிஞர் விருமாண்டி கண்ணீஸ்வரி, திரு ம. பெ. அன்புக்கரசன், எழுத்தாளர் பொன்ஸீ (வடவீர பொன்னையா), வடுகபட்டி பேரூராட்சித் துணைத்தலைவர் எம். எஸ்.எம். அழகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாரியம்மன் கோயில்பட்டி ஜெ. திருப்புகழ் அவர்களின் பல்குரல் நிகழ்வு, வராகநதித் தமிழ்ச் சங்கத்தின் மூலம் சாதனையாளர்கள் 12 பேர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. கவிஞர் அ. பாண்டிய மகிழன் ஏற்புரை வழங்கினார்.

# திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய கூட்டம் 3 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்

**திருச்செந்தூர், மார்ச் 09:**



ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

நேற்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது.

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

பொதுவாக விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் விழா நாட்களிலிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், கார்களிலும் வந்து கடல் மற்றும் நாழிக் கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம். அந்த வகையில் ஞாயிறு விடுமுறை தினமான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது.

மாநிலத்தின் பல் வேறு பகுதிகளில் இருந்து கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

## திருமஞ்சனம் திவ்ய சேவை




திருவல்லிக்கேணி ஸ்ரீதெள்ளியசிங்கர் தவண உற்சவம் முதல் நாள் காலை புறப்பாடு மற்றும் திருமஞ்சனம் திவ்ய சேவை.

## 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி



**திருவண்ணாமலை, மார்ச்09:**

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு.அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் போளூர் வடக்கு ஒன்றியத்தை சேர்ந்த படவேடு ஊராட்சி கேசவபுரம், பங்களா ரோடு ஆகிய பகுதிகளில் வீடு வீடாக நேரடியாக சென்று 2026 -ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மகளிர் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடுவிழா



**யானைமலை, மார்ச் 09:**

மகளிர் தினத்தை முன்னிட்டு யானைமலை கிரீன் பவுண்டேஷன் 257 வது வார மரக்கன்றுகள் நடும் விழா உத்தங்குடி வளர் நகர் பகுதியில் நடைபெற்றது.

திருமங்கலம் வட்டார ஒருங்கிணைப்பாளர் செல்வி தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் தென்னவன் முன்னிலை வகித்தார். திருமோகூர் ஐஸ்வர்யா வரவேற்றார். மகளிர் தினத்தின் கருப்பொருள் குறித்து விக்னேஸ்வரி சிறப்புரையாற்றினார்.

அனைத்து மகளிர்களும் கௌரவப்படுத்தப்பட்டனர். புங்கை மரக்கன்றுகள் நட்டு இயற்கை உரமிட்டு வலை கட்டப்பட்டு தண்ணீர் ஊற்றப்பட்டது.

நிகழ்வில் மாட்டுத்தாவணி தலைமை காவலர் வெங்கடேஸ்வரன், ஆலோசகர் ராகேஷ், பாலமுருகன், பாஸ்கரன், திருவாதவூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தண்ணாயிர மூர்த்தி, தியாகராசர் நன்முறை மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கார்த்திக், பசுமை சாம்பியன் அசோக்குமார், மீனாட்சி தட்டச்சு பயிற்சி நிறுவன உரிமையாளர் ஜெயபாலன், அரிய நட்சத்திரா, நலினா, நிலா ஸ்ரீ, பிரசீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் ஸ்டெல்லா மேரி நன்றி கூறினார்.

# சின்னப்பாலத்தில் ஆண்டு விழா



**பாம்பன், மார்ச் 09:**

பாம்பன், சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் 24வது ஆண்டு விழா வட்டார வள மைய மேற்பார்வையாளர் வனிதா தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியப் பயிற்றுநர் முருகன், வனத்துறை அலுவலர் சாமிநாதன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முருகேசன் போன்றோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் ஜெ.ஜே.லியோன் வரவேற்றுப் பேசினார்.தலைமையாசிரியை செல்லம்மாள் ஆண்டறிக்கை சமர்பித்தார்.

வனத்துறை சார்பில் சமுதாயப் பங்களிப்பு நிதியில் ரூபாய் ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி வளாகத்தில் மேற்கூரை அமைத்து கொடுத்தனர்.

நம்ம ஊரு நம்ம பள்ளி திட்டத்தின் மூலம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பங்களிப்பு நிதியில், ரூபாய் 4,75,000/= மதிப்பில் டெஸ்க், பெஞ்ச், நாற்காலி, தண்ணீர் சுத்திகரிப்பான் போன்றவை வழங்கினர். ரக்சா டிரஸ்ட் மூலம் ரூபாய் 2,50,000 மதிப்பீட்டில் மேடை அமைக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.


கல்வி, வருகைப்பதிவு, சிறுசேமிப்பு, கலைத்திருவிழா, விளையாட்டு போட்டிகள், தேசிய திறனறிவுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இவ்வாண்டின் சிறந்த மாணவராக,தெரிவு செய்யப்பட்ட மாணவி கனிஷ்காவிற்கு பரிசு வழங்கப்பட்டது.தொடர்ந்து, மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாம்பன் கிளை நூலகர் ரிசாலத் அலி, நன்கொடையாளர் ஞானப்பிரகாசம், வனத்துறை பிரின்ஸ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் லெட்சுமி, முன்னாள் வார்டு உறுப்பினர் பாண்டியம்மாள், கடலோசை லெனின், சமூக ஆர்வலர் ராமு, பொறியாளர் ராஜ பரிதி, தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் பாரதி, பாம்பன் ஆரம்பப்பள்ளி தலைமையாசிரியர் விஜய ராணி, கல்வி 40 பம்பில் பீ ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் வனிதா, சின்னப்பாலம் கிராமத் தலைவர் முருகேசன், பொருளாளர் செல்வம், இளைஞர் மன்ற தலைவர் கௌதம், மகளிர் மன்ற முனியம்மாள், சின்னப்பாலம் முன்னாள் கிராமத் தலைவர் முருகேசன், தோப்புக்காடு கிராமத் தலைவர் முனியைய்யா போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிறைவாக, ஆசிரியை ஞான சௌந்தரி நன்றியுரை வழங்கினார்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் நிஷா, மிக்கேல் ராணி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, அமுதவள்ளி, பிரிஸ்கிலா, பெனாசிர் பேகம், நான்சி, சிலோக்சனா, நாகேஸ்வரி போன்றோர் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மதுரை மாவட்ட உலக மகளிர் தின விழா



**மதுரை, மார்ச் 09:**

தமிழ்நாடு அரசு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கம் மதுரை சார்பில் உலக மகளிர் தின விழா தனியார் மண்டபத்தில் 7.3.26 காலை 10 மணிக்கு மாவட்ட அமைப்பாளர் இ. பானு தலைமையில் நடைபெற்றது.

முன்னிலை எஸ். பஞ்சவர்ணம் பி .புஷ்பம் P. வழிவிட்டாம்மாள்.சி. இந்துமதி வரவேற்புரை ஏ .கீதா. துவக்க உரை பரமேஸ்வரன் மாவட்ட தலைவர்TNGPA . தீர்மானங்கள் A.தமிழ்ச்செல்விN. வான்மதி A.தௌலத் . கவிதை R.டாரத்தி நல்லம் மாள். பாடல்கள் எஸ். ஜீவ மணி கருத்தரங்கம் நாடும் -நாமும் பேராசிரியர் தேவகி துரைசிங். உடலும் - உயிரும் டாக்டர்N. தினகரன். அரசு மருத்துவர் மதுரை. வாசிப்பை நேசிப்போம் பேராசிரியர் சாந்தி செல்வராஜ் மாவட்ட தலைவர் தமுஎ கச மதுரை. சங்கமம்- மகளிரும் என் .ஜெயச்சந்திரன் மாநில தலைவர்TNGPA. வாழ்த்துரை எம். ரம்யா மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் TNGEA. நன்றியுரை ஆர் முத்து லட்சுமி மாவட்ட இணை செயலாளர். ஓய்வூதியர் மகளிர் தோழர்கள் விழாவில் அதிக அளவில் பங்கேற்றார்கள் மதிய உணவு உடன் விழா நிறைவு பெற்றது.

விழா ஏற்பாடுகள் மாவட்ட நிர்வாகிகள் மதுரை

## தண்ணீர் தேடி ஊருக்குள் புகுந்த காட்டு யானை



தளி அருகே உள்ள கும்மலாபுரம் கிராமத்தில் காட்டு யானை ஒன்று கிராமத்திற்குள் புகுந்து வலம் வந்த காட்சி தற்போது பொது மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.























ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901













**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424










**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## கவிதை அரங்கம்!



நீள்கின்ற
நிமிடங்களும்
நொடிகளாய்
கரைந்திடுதே
உன்னில்
மூழ்கிவிட்டால்


உன் கண்ணில்
தூசிவிழ
கலங்கியது
என் விழிகள்

திணறடிக்கும்

உன் அன்பில்
சிறையிருக்க வேண்டும்
ஆயுளின்
கடைசி நொடிவரை
ஆயுள் கைதியாய்
உன் இதயத்தில்

தேநீரில்
கரைந்த சக்கரையாய்
கலந்துவிட்டாய்
என்றும் திகட்டாத
தித்திப்பாய் மனதில்

## வாழ்க்கை தத்துவம்...



நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்,
கனவு மெய்ப்பட வேண்டும், கைவசமாவது விரைவில் வேண்டும்,
தனமும் இன்பமும் வேண்டும், தரணியேலே பெருமை வேண்டும்,
கண் திறந்திட வேண்டும், காரியத்தில் உறுதி வேண்டும்,
பெண் விடுதலை வேண்டும், பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும், வானமிங்கு தென்பட வேண்டும்,
உண்மை நின்றிட வேண்டும். பாரதியார்.

எத்தனை துன்பங்கள் பகைவர்களால் வந்தாலும், அதை அன்பாலேயே வென்று விடுங்கள். காந்திஜி.

துன்பங்ளுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன. - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

## டைட்டில் தகராறு!



அறுபது வயதான இயக்குனர் ஆறுமுகம் தனது ஏசி அறைக்குள் நுழைந்தார். அசிஸ்டண்ட் டைரக்டர்கள் மூவரும் தீவிர விவாதத்தில் இருந்தனர்.

"எல்லாரும் கவனிங்க, போன ரெண்டு படம் அட்டர் பிளாப்! ஆனா இந்த மூணாவது படம் தியேட்டர்ல தெறிக்கவிடணும். சப்ஜெக்ட் செம மாஸ். ஆனா அந்த 'டைட்டில்' தான் இன்னும் சிக்கலாவே இருக்கு!" என்றார் இயக்குனர்.

"சார், 'சிங்கம்', 'புலி'ன்னு எல்லா விலங்கு பெயரையும் வச்சிட்டாங்க. 'துப்பாக்கி', 'கத்தி'ன்னு எல்லா ஆயுதத்தையும் எடுத்துட்டாங்க. நாம என்ன பண்ணலாம்?" என ஒருவன் இழுத்தான்.

"ஏதாவது வித்தியாசமா, ஆடியன்ஸ் எதிர்பார்க்காத மாதிரி இருக்கணும்டா!"

"சார், படத்தோட கதையில ஹீரோ எல்லார்கிட்டயும் கடன் வாங்கிட்டு ஓடிடுறாருல்ல? அதனால படத்துக்கு *'கடன் அன்பைச் செலுத்தும்'*னு வைக்கலாமா?" என்றான் முதல் அசிஸ்டண்ட்.

"யோவ், இது என்ன பேங்க் கதையா? ஒழுங்கா யோசிங்கடா!" என இயக்குனர் கத்த, அடுத்தவன் முந்தினான்.

"சார், கதையில ஹீரோயின் கடைசி வரைக்கும் ஹீரோவை ஏமாத்திட்டே இருக்கா.. அதனால *'ஏமாறாதே ஏமாற்றாதே'*ன்னு வச்சிடலாம்."

"டேய், இது எம்.ஜி.ஆர் காலத்து டைட்டில் மாதிரி இருக்குடா. வேற ஏதாவது புதுசா சொல்லுங்க."

அப்போதுதான் மூலையில் அமர்ந்திருந்த ஒருவன், "சார், படத்துல வர்ற எல்லாரும் ஒன்னு மத்தவங்களை கிண்டல் பண்றாங்க, இல்லன்னா காலை வாரி விடுறாங்க. அதனால படத்துக்கு *'உருப்படாத உலகம்'*னு வைக்கலாம்" என்றான்.

இயக்குனர் தலையில் அடித்துக்கொண்டு, "யோவ், அப்புறம் படம் எப்படி உருப்படும்? சரி, கதையைக் கேளுங்க... ஹீரோ ஒன்பது பேரை காதலிச்சு, கடைசியா பத்தாவது பொண்ணு கூட திருநீர்மலை கோவில்ல ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிறான். இதுதான் கிளைமாக்ஸ். இதுக்கு ஒரு டைட்டில் சொல்லுங்க."

மெல்லிய குரலில் ஒரு அசிஸ்டண்ட் சொன்னான், "இதுக்கு *'ஆடியன்ஸ்க்கு சாபம்'*னு டைட்டில் வைப்பதே பொருத்தமா இருக்கும் சார்!"

குரூப்பில் நிசப்தம் நிலவ, இயக்குனர் கையில் இருந்த ஸ்கிரிப்ட் பேப்பர் பறந்து வந்தது!



**லால்குடி வெ.நாராயணன்**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: டியர்.. நீங்க என்னை எவ்வளவு காதிலிக்கிறேன்னு சொல்ல முடியுமா?*

*மனைவி: ஆஹா என்னோட டீப் லவ்.. 72 % டி என் செல்லம்..*

*போங்க.. டார்லிங் நீங்க மோசம் அப்ப அந்த 28 % எவளுக்காம்?*

*அட கிறுக்கி.. அழகுப் பொருள்களுக்கு 28 % ஜிஎஸ்டி கவர்மெண்டுல புடிச்சுக்குவாண்டி*



## தினம் ஒரு சமையல்



### பிடி கருணை கிழங்கு வருவல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பிடிகருணை | -1/2 கப் |
| கடலை எண்ணெய் | -5 டீஸ்பூன் |
| கடுகு | -1/2 டீஸ்பூன் |
| உளுத்தம்பருப்பு | -1 டீஸ்பூன் |
| மிளகாய் | -2காய்ந்த |
| பூண்டு | -10பல் |
| கருவேப்பிலை | |
| உப்பு | |
| மஞ்சள் தூள் | -1/4 டீஸ்பூன் |
| சிவப்பு மிளகாய் தூள் | -1 டீஸ்பூன் |


**செய்முறை:**



குக்கரில் மஞ்சள்தூள், உப்பு, பெருங்காயம் சேர்த்து கருணைக்கிழங்கை வேக வைத்துக் கொள்ளவும். வெந்ததும் தோல் நீக்கி படத்தில் உள்ளது போல் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு உளுத்தம்பருப்பு காய்ந்த மிளகாய் கறிவேப்பிலை நசுக்கிய பூண்டு சேர்த்து தாளித்துக் கொள்ளவும்.

பொடியாக நறுக்கிய கருணைக்கிழங்கு அதனுடன் சேர்த்து சிறிது உப்பு, சிவப்பு மிளகாய்த்தூள் சேர்த்து நன்றாக பிரட்டி வறுத்து எடுத்தால் சுவையான கருணைக்கிழங்கு வறுவல் ரெடி.

## யூகலிப்டசு பயன்கள்



யூகலிப்டஸின் நன்மைகள்

பெரும்பாலான யூகலிப்டஸ் இலைகளில் 1,8-சினியோல் அல்லது யூகலிப்டால் எனப்படும் வேதியியல் சேர்மம் நிறைந்துள்ளது, இருப்பினும் செறிவு இனத்தைப் பொறுத்து மாறுபடும். இந்த சேர்மங்கள் சில மருத்துவ நடவடிக்கைகளைக் கொண்டுள்ளன, இதனால் யூகலிப்டஸுக்கு சில ஆரோக்கிய நன்மைகள் கிடைக்கின்றன.

வலியைப் போக்கும்

யூகலிப்டஸ் எண்ணெய் தோலில் குளிர்ச்சியான உணர்வைக் கொண்டுள்ளது, இது யூகலிப்டால் சேர்மத்திலிருந்து வருகிறது. ஆய்வக உணவு ஆய்வுகளில், இந்த யூகலிப்டால் கலவை வலியில் ஈடுபடும் உணர்ச்சி பாதைகளைத் தடுக்கிறது., இது ஒரு வலி நிவாரணியாக இருக்கலாம் என்று பரிந்துரைக்கிறது . யூகலிப்டஸ் எண்ணெய் வீக்கம், வீக்கம் மற்றும் வலியைக் குறைக்கிறது என்று விலங்கு ஆய்வுகள் காட்டுகின்றன.

யூகலிப்டஸை சுவாசிப்பது இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் என்று ஒரு சிறிய மனித ஆய்வு காட்டுகிறது.மற்றும் முழு முழங்கால் மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படும் நோயாளிகளின் வலி உணர்தல் .

பூச்சி விரட்டி

உண்ணிகள் பாக்டீரியா மற்றும் ஒட்டுண்ணிகளைப் பரப்பக்கூடிய சிறிய பூச்சிகள், இதனால் ராக்கி மவுண்டன் ஸ்பாட் ஃபீவர் அல்லது லைம் நோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன . எலுமிச்சை யூகலிப்டஸ் எண்ணெய் என்பது உண்ணிகளை விரட்டக்கூடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சில இயற்கை பொருட்களில் ஒன்றாகும், இருப்பினும் நீங்களே செய்யக்கூடிய (DIY) பூச்சி விரட்டியை நீங்கள் தயாரிக்கக்கூடாது. உண்ணி பருவத்திற்கு எலுமிச்சை யூகலிப்டஸைப் பயன்படுத்த விரும்பினால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்தில் (EPA) பதிவுசெய்யப்பட்ட ஒரு தயாரிப்பைப் பயன்படுத்தவும். இந்த வழியில், பாதுகாப்பிற்காக சரியான செறிவில் எண்ணெயைப் பெறுவீர்கள்.

சுவாசத்தைப் புத்துணர்ச்சியாக்கும்

யூகலிப்டஸ் என்பது மவுத்வாஷ்களில் பிரபலமான ஒரு மூலப்பொருள். சினியோல் அல்லது யூகலிப்டால் என்பது ஒரு கிருமிநாசினியாகும், இது துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பாக்டீரியாக்களைக் கொல்லும் . இது புத்துணர்ச்சியூட்டும், குளிர்ச்சியான உணர்வையும் கொண்டுள்ளது, இது உங்கள் வாயை பிரகாசமாகவும் சுத்தமாகவும் உணர வைக்கிறது. யூகலிப்டஸை மெந்தோல் போன்ற பிற எண்ணெய்களுடன் சேர்த்து மவுத்வாஷ் செய்வது உங்கள் பற்களில் பிளேக் படிவதைத் தடுக்க உதவும்., கூட. தொண்டைப் புண்களைத் தணிக்கும்.




## யூத் டிரெய்லரை வெளியிட்டு கென் கருணாஸை பாராட்டித் தள்ளிய சிலம்பரசன்

'அசுரன்', 'விடுதலை 2' படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். இதுதவிர சில திரைப்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கும் கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

இந்தப் படம் மார்ச் 19-ஆம் தேதி வெளியாகும் என படக்குழு தெரிவித்து இருக்கிறது. 'யூத்' திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

'யூத்' படத்தின் 'முட்ட கலக்கி,' 'பறந்தேனே பெண்ணே' மற்றும் 'ஆச புள்ள' பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த நிலையில், 'யூத்' திரைப்படத்தின் டிரெய்லரை நடிகர் சிலம்பரசன் வெளியிட்டுள்ளார். இன்று மாலை வெளியாக இருந்த நிலையில், டிரெய்லர் ரிலீஸ் சில மணி நேரங்கள் தாமதமாகி இருக்கிறது.

கென் கருணாஸ் எழுதி, இயக்கி இருக்கும் யூத் திரைப்படத்தின் டிரெய்லரை தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பகிர்ந்த நடிகர் சிலம்பரசன், "யூத் திரைப்படத்தின் டிரெய்லரை புத்துணர்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் வழங்குவதில் மகிழ்ச்சி! இயக்குநராக அறிமுகமாகி இருக்கும் கென் கருணாஸ் தம்பிக்கு வாழ்த்துக்கள். இவ்வளவு இளம் வயதிலேயே நடிப்பு மற்றும் இயக்கம் இரண்டையும் பொறுப்பேற்று இருப்பது பாராட்டுக்கு உரியது. நீங்கள் எதிர்காலத்தில் பெரிய உயரங்களை அடைய வாழ்த்துகிறேன். முழு குழுவிற்கும் ஒரு பிளாக்பஸ்டர் வெற்றிக்காக வாழ்த்துக்கள்,"



ஆஷ்னா சவேரி தாராள கிளாமர் உடையில் செம ஹாட் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். இதோ..

## காதல் மனைவிக்கு ஆடம்பர காரை பரிசளித்த அல்லு அர்ஜுன்



இந்திய திரையுலகின் பிரபல நடிகர்களில் ஒருவர் அல்லு அர்ஜுன். இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்று, வசூலிலும் சாதனை படைத்தன. இந்த வரிசையில், நடிகர் அல்லு அர்ஜுன் தற்போது இயக்குநர் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கும் திரைப்படங்களில் நடிக்கிறார்.

சமீபத்தில் அல்லு அர்ஜுன் குடும்ப திருமண விழா நடைபெற்றது. இதில் இந்திய திரையுலகை சேர்ந்த பல பிரபலங்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். இந்த நிலையில், நடிகர் அல்லு அர்ஜுன் மற்றும் அல்லு ஸ்னேகா ரெட்டி தம்பதி தங்களது 15-வது திருமண நாளை கொண்டாடினர்.

திருமண நாளை ஒட்டி நடிகர் அல்லு அர்ஜுன் தனது மனைவிக்கு ஆடம்பர மெர்சிடிஸ் பென்ஸ் ஏ.எம்.ஜி. காரை பரிசளித்துள்ளார். இது தொடர்பாக அல்லு அர்ஜுன் தரப்பில் வெளியான வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகிறது. அல்லு அர்ஜுன் பரிசளித்துள்ள ஆடம்பர காரின் விலை இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட ரூ. 1 கோடி வரை இருக்கும் என்று தெரிகிறது.

# மாசி, மிருகசீரிஷம் திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்திரம்!

"ஸ்ரீமத் காஞ்சிமுநிம் வந்தே கமலாபதி நந்தனம்|
வரதாங்க்ரி ஸதாஸங்கி ரஸாயன பராயணம்||"
-தனியன் (எம்பெருமானார்)
-

ஸ்ரீவரதராஜப் பெருமாளின் திருவடித் தாமரைகளை ஸேவிக்கும் ரஸமான அனுபவத்தில், ஒரு கணம் கூட விடாமல் பராயணராயிருப்பவரும், ஸ்ரீயப்பதியான எம்பெருமானுடைய திருநாமத்தை கொண்ட திருத்தகப்பனராக பெற்றிருப்பவரும், காஞ்சிபுரத்தில் முனிவராக வாழும் திருக்கச்சி நம்பிகளுக்கு நமஸ்காரம்!

பூவிருந்தவல்லியில் (பூந்தமல்லி) சபரி யினுடைய அம்சமாக அவதரித்தவர்! இவருடைய பிற திருநாமங்கள் பார்கவப்ரியர், கஜேந்திர தாஸர், காஞ்சி முனி, காஞ்சி பூர்ணர்!

பொதுவாக ஆசார்யர் தான் சிஷ்யருக்கு ஸ்ரீவைஷ்ணவ மார்க்கத்தையும், எம்பெருமானையும் புருஷாகாரம் செய்விப்பர்! ஆனால் திருக்கச்சி நம்பிகளுக்கு தேவப்பெருமாளே கனவில் தோன்றி தமக்கு கைங்கர்யம் செய்யுமாறு நியமித்தார்!

கனவில் வந்தவர் யாரென்று தெரியாததால், தேவப்பெருமாளிடமே, தேவரீர் திருநாமம் என்ன? திவ்யதேசம் யாது? என்று வினவ, பெருமாளும் உலகேத்தும் ஆழியான் அத்தியூரான் காணும் நாம்; காமருபூங்கச்சி நகர் காணும் நம்மூர் என, நம்பி மீண்டும், உம்மூருக்கு வழியறியேன் என்ன, இங்கு நின்று நம்மூரைக் குறித்துப் புறப்படக்கடவீர், உமக்கு எவ்வழியில் செங்கழுநீர் புஷ்பம் சிந்திக் கிடக்கிறதோ, அவ்வழியே வந்தால், நம்மூரைக் காணலாகும் என்றருளினார்! நம்பியும் அவ்வாறே காஞ்சி சென்று, பேரருளாளனை கைங்கர்யம் வேண்டி பிரார்த்திக்க அவர் நியமனப்படி திருஆலவட்டம் (விசிறி) வீசும் கைங்கர்யம் செய்து வந்தார்! திருக்கச்சி நம்பிகளுக்கு ஆளவந்தார் சூட்டிய நாமம் பேரருளாள தாஸர்! சூட்டிய திருநாமத்திற்கேற்ப பேரருளாளனுக்கு தாஸனாய் இருந்து, தமக்கு புழுங்கும் போதெல்லாம் வரதனுக்கு விசிறிவிட்டு, தமக்கு பசிக்கும் போதெல்லாம் வரதனுக்கு அமுது செய்வித்து கைங்கர்ய பரராய் இருந்தார்! வரதனும் தம் அர்ச்சை நிலையைக் கடந்து இவரோடு அனுவரதமும் பேசிக்கொண்டு இருப்பாராம்!

நம்பியை ஆசார்யராக அபிமானித்த ஒரு பிராமணரை அவரது குடும்பம் ஜாதிபிரதிஷ்டை செய்ய, அவர் நம்பியைப் பிரிய மனமின்றி அவர் முன்னமே பரமபதம் எய்தினார்!

அந்த பிராமணர் மோக்ஷத்திற்கு போயிருப்பாரோ? நம்பிக்கு சந்தேகம்! வரதனிடத்தில் அவர்பற்றி கேட்கின்றார்.



அவருக்கு மோக்ஷம் நிச்சயம்- ஏனெனில் அவன் உம்மை ஆசார்யனாகப் பற்றினான்! - வரதன்
எனக்கும் மோக்ஷம் உண்டா, ப்ரபோ!? -நம்பி
உமக்கு கிடையாது! நம்பி அதிர்கின்றார்! "இவ்வளவு நாள் நீர் அர்ச்சை நிலையைக் கடந்து என்னுடன் பேசியதெல்லாம்?"

"நீர் விசிறினீர் - நான் பேசினேன்" இரண்டும் சாம்யமாயிற்று!

ப்ரபோ! என்னதான் கதியெனக்கு? நம்பி விம்முகின்றார்.

"நல்லதொரு ஆசார்யனை அடைந்து, என்னிடத்தே வாரும்" என்று வரதன் அனுப்பிவிட்டார்!

பகவானுடனேயே பேசியவரை எவர் தாம் சீடராக ஏற்பர்? நம்பி அலைகின்றார்.

கடைசியில் திருக்கோஷ்டியூர் நம்பியிடத்து, மாறுவேடத்தில் மாடு மேய்ப்பவனாக கைங்கர்யம் செய்கின்றார்! ஒரு கட்டத்தில் திருக்கோஷ்டியூர் நம்பிகளால் நம்பையல் என்று அபிமானிக்கப்படுகிறார்! பிறகு வரதனால் அங்கீகரிக்கப்பட்டு, வைகுந்தம் எய்தினார்! ஸ்ரீராமானுஜரை ஆளவந்தாருக்கு அடையாளம் காட்டியவர் திருக்கச்சி நம்பிகளே! அப்போதுதான் ஆளவந்தார் ராமாநுஜரை "ஆம், முதல்வன்!" என்று கொண்டாடினார்!

யாதவப்பிரகாசரிடம் பாடம் கேட்டு வந்த இராமாநுஜரை திருத்திப்பணி கொண்டு, தேவப்பெருமாளிடம் "ஆறு வார்த்தை" பெற்றருளி, வரதனே அவரை "யதிராஜர்" ஆக்கி, பின்பு அவர் ஸ்ரீரங்கம் எழுந்தருள்வதற்கான எல்லா ஆயத்தங்களை செய்தவர் திருக்கச்சி நம்பிகளே!

திருக்கச்சி நம்பிகள் அருளிச்செய்த ஒரே கிரந்தம் "தேவராஜ அஷ்டகம்" - எட்டு ஸ்லோகங்களைக் கொண்டது!!

- Sampath

# தினம் ஒரு தலைவர்கள் ஆர்.உமாநாத் வரலாறு

ஆர். உமாநாத் என்று பரவலாக அறியப்படும் இராம்நாத் உமாநாத் செனாய் (21 திசம்பர் 1921 - 21 மே 2014) மார்க்சிய பொதுவுடமைக் கட்சியின் ஆட்சிக்குழுவில் (பொலிட்பீரோ) 1998 முதல் அங்கம் வகித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பொதுவுடமை அரசியல்வாதி ஆவார். தமிழ்நாடு மாநிலச் செயலாளராகவும் சி.ஐ.டி. யூவின் தலைவராகவும் விளங்கியவர்.

## பிறப்பு, ஆரம்ப வாழ்க்கை

1921ஆம் ஆண்டு கேரளத்தின் காசர்கோட்டில் இராம்நாத் ஷெனாய், நேத்ராவதி தம்பதியினருக்கு கடைசி மகனாகப் பிறந்த இவர் தமது மாணவப் பருவத்தில் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பின்போது, சுப்பிரமணிய சர்மாவின் அறிமுகக் கடிதத்துடன் பல்கலைக்கழகத்தில் இருந்த பொதுவுடைமைக் குழுவில் சேர்ந்தார்.

## அரசியல் வாழ்க்கை

பொதுவுடைமை இயக்கத்தில் கட்சி கேட்டுக் கொண்டதன் படி, கல்லூரிப் படிப்பைத் துறந்து, சென்னையில் உள்ள தலைமறைவு மையத்திலிருந்து மாநிலம் முழுவதும் ரகசியமாகத் தகவல்களைக் கொண்டு சேர்க்கும் கூரியர் பணியை ஏற்றுக் கொண்டு, முழுநேர ஊழியராகக் கட்சிப்பணியில் ஈடுபட்டார். 1940ல் சென்னை சதி வழக்கில் பி. ராமமூர்த்தியுடன் கைதுசெய்யப்பட்ட அவர் மூன்று ஆண்டுகளை சிறையில் கழித்தார். அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒட்டுமொத்தமாக ஒன்பதரை ஆண்டுகளை சிறையில் கழித்திருக்கும் அவர், 7 ஆண்டுகள் தலைமறைவாகவும் இருந்திருக்கிறார் . இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1949ல் ரயில்வே தொழிலாளர் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.1951 ஆம் ஆண்டு கட்சியின் மீதிருந்த தடை நீக்கப்பட்டபோது திருச்சி சதி வழக்கில் தண்டனை பெற்றிருந்ததால் அவர் விடுவிக்கப்படவில்லை. 1954 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள்தான் அவர் விடுவிக்கப்பட்டார். நெருக்கடி நிலை காலகட்டத்திலும் பல அடக்குமுறைகளைச் சந்தித்துள்ளார்.



தொழிற்சங்கப் பணிகள்
1970ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற ஸ்தாபன மாநாட்டில் அகில இந்திய நிர்வாகியாகவும், முதல் மாநாட்டிலிருந்து தமிழ் மாநில பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு 1993ம் ஆண்டு வரை அப்பொறுப்பில் இருந்தார் .ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சட்ட சலுகைகளையும், உரிமைகளையும் பெறுவதற்கு பி.ராமமூர்த்தி மற்றும் கே.ரமணி இவர்களோடு இணைந்து வெற்றிகரமான வேலை நிறுத்தங்களை நடத்தியவர் . டால்மியாபுரம் சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தின் போது பி. ராமச்சந்திரன் பத்து நாள் உண்ணாவிரதம் இருந்தார்.அதைத் தொடர்ந்து உமாநாத் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டபோது அண்ணா அரசாங்கம் தலையிட்டு பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

## சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராக

1962ல் புதுக்கோட்டை மக்களவைத் தொகுதியில் நடந்த தேர்தலில் உமாநாத்தை பொதுவுடைமைக் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டார் . காங்கிரஸ் கட்சி சார்பில் பிரபல பஞ்சாலை முதலாளி நின்றார். 30,000 வாக்கு வித்தியாசத்தில் உமாநாத் வெற்றிபெற்றார். 1967ல் பிரபல தோல் ஆலை முதலாளி நாகப்ப செட்டியாரைக் காங்கிரஸ் நிறுத்தியது. இருப்பினும் மீண்டும் உமாநாத் வெற்றி பெற்றார்.

## தனி வாழ்க்கை

1952 ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பாப்பா உமாநாத்தை திராவிட இயக்கத் தலைவர் ஈ. வெ. இராமசாமி தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்தார். இந்தத் தம்பதியினரின் இலட்சுமி, வாசுகி, நிர்மலா என்ற மூன்று மகள்களில் மருத்துவரான லட்சுமி ஏற்கனவே இறந்துவிட்டார். பாப்பா உமாநாத் 2010ஆம் ஆண்டில் காலமானார்.

## இறப்பு

உடல் நலக் குறைவால் சில காலம் அவதிப்பட்டு வந்த உமாநாத் திருச்சியில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார். அவரது மரணம் மருத்துவர்களால் உறுதிசெய்யப்பட்டவுடன், அவரது விருப்பத்தின்படி, அவரது கண்கள் தானம் செய்யப்பட்டன. திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை மருத்துவர்கள் அவரது கண்களைப் பெற்றுச்சென்றனர்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை திங்கள்கிழமை 09.03.2026

# ஐக்கிய ஜனதா தளத்தில் இணைகிறார் நிதீஷ் மகன் நிஷாந்த்! துணை முதல்வராக தேர்வு செய்ய முடிவு

**பாட்னா, மார்ச் 9:**

நிதீஷ் குமாரின் ராஜிநாமாவுக்கு பிறகு அமையும் புதிய அரசில் நிஷாந்தை துணை முதல்வராக்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக, ஜேடியு எம்எல்ஏ ஹரி நாராயண் சிங் சனிக்கிழமை தெரிவித்தார். இவர், நிதீஷ் குமாருக்கு நெருக்கமானவர் ஆவார்.

நிஷாந்தின் அரசியல் பிரவேசம், ஜேடியு தலைமையின் தலைமுறை மாற்றத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

பிகார் முதல்வராக கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாகப் பதவி வகித்துவரும் நிதீஷ் குமார், மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு கடந்த மார்ச் 5-இல் வேட்புமனு தாக்கல் செய்தார். இதன்மூலம் தனது முதல்வர் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ள அவர், விரைவில் பதவி விலக உள்ளார். நிதீஷ் விலகலுக்குப் பின் பாஜக முதல்வர் தலைமையில் பிகாரில் புதிய அரசு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பரில் 10-ஆவது முறையாக முதல்வராகப் பதவியேற்றிருந்த நிதீஷ் குமாரின் திடீர் முடிவு, ஜேடியு கட்சியினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவரது முடிவின் பின்னணியில் கூட்டணிக் கட்சியான பாஜகவின் சதி உள்ளதாக ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டினர்.

அரசியலில் குதிக்கும் நிஷாந்த்: இந்நிலையில், பாட்னாவில் உள்ள ஜேடியு தேசிய செயல் தலைவர் சஞ்சய் ஜாவின் இல்லத்தில் ஜேடியு எம்எல்ஏ மற்றும் எம்எல்சி-க்கள் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அவர்களுடன் தனது எதிர்கால வியூகங்கள் குறித்து நிஷாந்த் குமார் ஆலோசனையில் ஈடுபட்டார்.

இந்தக் கூட்டத்தில் நிஷாந்த் குமார் நேரடி அரசியலில் களமிறங்கும் முடிவு இறுதி செய்யப்பட்டதாகவும், அவர் கட்சியில் ஞாயிற்றுக்கிழமை முறைப்படி இணைவார் என்றும் ஜேடியு எம்எல்ஏ ஹரி நாராயண் தெரிவித்தார்.

துணை முதல்வராகிறார்: இது தொடர்பாக செய்தித் தொலைக்காட்சி ஒன்றுக்கு சனிக்கிழமை பேட்டியளித்த ஹரி நாராயண், 'பிகார் மேலவை உறுப்பினராக நிஷாந்த் குமார் அடுத்த மாதம் தேர்வு செய்யப்படுவார்.

# எஸ்ஐஆர் நடைமுறை மிக வெளிப்படையானது: தலைமைத் தேர்தல் ஆணையர் பேட்டி

**புதுடெல்லி, மார்ச் 9:**




140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி, முன்னேற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், கொச்சியில் செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாட்டின் பிற பகுதிகளுக்கும், உலகுக்கும் ஜனநாயக செயல்முறைகளைக் கற்பித்த மாநிலம் கேரளம். கேரளம் கடந்த 1960-களில் முதலாவதாக தேர்தல் நடத்தை விதிமுறைகளை உருவாக்கியது. பின்னர், அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து, அந்த விதிமுறைகளையே ஏற்றுக் கொண்டது தேர்தல் ஆணையம். தேர்தல் நிர்வாகத்திலும் முன்னோடி மாநிலம் கேரளம். கடந்த 1982-இல் பரவூர் பேரவைத் தொகுதியில் பரீட்சார்த்த அடிப்படையில் முதல் முறையாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

தற்போதைய தேர்தலில் 2.69 கோடி வாக்காளர்களுக்காக மாநிலம் முழுவதும் 30,471 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. 100 சதவீத வெப் கேமரா கண்காணிப்பு உறுதி செய்யப்படும். 397 வாக்குச்சாவடிகள் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும். வாக்குப் பதிவு மையங்களின் வாயில் வரையே கைப்பேசிகள் அனுமதிக்கப்படும். கேரளத்தில் முதல் முறையாக வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படம் இடம்பெறவுள்ளது.

தவறில்லாத வாக்காளர் பட்டியலே ஜனநாயகத்தின் அடிப்படையாகும். தகுதியுள்ள நபர் விடுபடவோ, தகுதியில்லாத நபர் சேர்க்கப்படவோ கூடாது என்ற தெளிவான நோக்கம் கொண்ட எஸ்ஐஆர் நடைமுறை மிகவும் வெளிப்படையானது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 326-இன்கீழ் தகுதியுள்ள வாக்காளர்களை மட்டுமே இது உறுதி செய்யும் என்றார்.

# இந்தியப் பெண்களின் 'ஸ்டார்ட்-அப்' நிறுவனங்கள்: 2025-இல் ரூ.10,000 கோடி நிதி திரட்டி சாதனை!

**புதுடெல்லி, மார்ச் 9:**

இந்தியாவில் பெண்களால் தொடங்கப்பட்ட ஸ்டார்ட்-அப் (புத்தாக்க) தொழில்நிறுவனங்கள், கடந்த 2025-ஆம் ஆண்டில் சுமார் 110 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10,115 கோடி) முதலீட்டைத் திரட்டி, நிலையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

கடந்த 2024-இல் இந்நிறுவனங்கள் 120 கோடி டாலர் நிதி திரட்டியிருந்த நிலையில், 2025-இல் 110 கோடி டாலராக சரிவானாலும், பெண் தொழில்முனைவோர் மீதான முதலீட்டாளர்களின் ஆர்வம் குறையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை 580-லிருந்து 407-ஆக குறைந்த போதிலும், சராசரி முதலீட்டுத் தொகை அதிகரித்துள்ளது. அதாவது, 2024-இல் ஒரு நிறுவனத்துக்குச் சராசரியாகக் கிடைத்த 24 லட்சம் டாலர் முதலீடு, 2025-இல் 38 லட்சம் டாலராக அதிகரித்துள்ளது. தொடக்க நிலை நிறுவனங்களுக்கான நிதி 52.8 கோடி டாலரிலிருந்து 57.2 கோடி டாலராக அதிகரித்துள்ளது. குறிப்பாக, நிகிதா பிரசாத் இணைந்து தொடங்கிய 'கிவா' ஆபரண நிறுவனம் 6.2 கோடி டாலரையும், நம்ரதா அஸ்தானா இணைந்து தொடங்கிய 'புளூ தோகை காபி' நிறுவனம் 2.5 கோடி டாலரையும் நிதியாகப் பெற்றுள்ளன. பெண் தொழில்முனைவோருக்கு அதிக நிதி ஈட்டித் தரும் நகரமாக கர்நாடகத்தின் பெங்களூரு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. பெங்களூரில் 44.7 கோடி டாலர், குருகிராமில் 11.5 கோடி டாலர், மும்பையில் 11.2 கோடி டாலரை நிறுவனங்கள் திரட்டியுள்ளன. அதன்படி, இந்தியத் தொழில்முனைவோர் துறையில் பெண்களின் ஆதிக்கம் மற்றும் பங்களிப்பு தொடர்ந்து வலுவடைந்து வருவதை இந்தப் புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

# மக்களவையின் சிறந்த தலைவர் ஓம் பிர்லா: பிரதமர் மோடி புகழாரம்

**புதுடெல்லி, மார்ச் 9:**

கோட்டா விமான நிலையத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் சனிக்கிழமை காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர் மோடி, ஓம் பிர்லா மீது பாராட்டு மழை பொழிந்தார். பிரதமரின் உரை வருமாறு: சிறந்த நாடாளுமன்றவாதியான ஓம் பிர்லா, மக்களவையின் சிறந்த தலைவரும் ஆவார். அரசமைப்புச் சட்டத்தின் மீது முழு அர்ப்பணிப்பும், நாடாளுமன்ற நடைமுறைகளில் பற்றுதலும் மிக்கவர். அவர் எந்தத் தரப்பின் உறுப்பினரும் அல்லர்; கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர். அவையில் பிர்லாவை காணும்போது, கல்வி நகரமான கோட்டாவில் இருந்து வந்ததன் செல்வாக்கை உணர்கிறேன். ஒரு குடும்பத்தின் நல்ல தலைவர் போல் அனைவரையும் ஒருசேர முன்னெடுத்துச் செல்லும் பாத்திரத்தை சிறப்பாக வகிக்கிறார். மதிப்புமிக்க எம்.பி.க்கள் அனைவரையும் மிக சிறப்பாக கையாள்கிறார். அவர்களின் உணர்வுகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பெரிதும் மதிப்பளிக்கிறார். எம்.பி.க்களுக்கு உச்சபட்ச மதிப்பளிக்கும் இயல்பு கொண்ட அவைத் தலைவர் ஓம் பிர்லாதான். அவர் யாரையும் அவமதிப்பதில்லை. ஒவ்வொருவரின் கசப்பான வார்த்தைகளையும் பொறுத்துக் கொண்டு, புன்னகை முகத்துடன் எதிர்கொள்கிறார். எப்போதுமே அவரது முகத்தில் இனிய புன்னகை தவழும். இதுவே, அவையில் பரவலாக அவர் நேசிக்கப்பட காரணம் எனக் கருதுகிறேன் என்றார் பிரதமர் மோடி. ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள தீர்மானம் மீது திங்கள்கிழமை விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் தோல்வியை எதிர்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரளா: வெளிநாட்டு கப்பல் மீது மீன்பிடி படகு மோதி விபத்து; 2 மீனவர்கள் மாயம்

**திருவனந்தபுரம், மார்ச் 9:**



கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் சக்திகுளங்கரை பகுதியில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு மீனவர்கள் மீன்பிடிக்க படகில் புறப்பட்டுள்ளனர். படகில் 11 மீனவர்கள் பயணித்தனர்.

இந்நிலையில், கேரளாவில் இருந்து 120 நாட்டிகல் மைல் தொலைவில் நேற்று இரவு மீன்பிடி படகு சென்றுகொண்டிருந்தது. அப்போது நடுக்கடலில் சென்றுகொண்டிருந்த வெளிநாட்டு கப்பல் மீது மீன்பிடி படகு மோதியது.

இந்த விபத்தில் படகு உடனடியாக கடலில் மூழ்கியது. படகில் இருந்த மீனவர்கள் 11 பேரும் கடலில் தத்தளித்தனர்.

இதையடுத்து, மோதிய வெளிநாட்டு கப்பலில் பயணித்த மாலுமிகள் கடலில் தத்தளித்த மீனவர்களில் 9 பேரை மீட்டனர். ஆனாலும், கடலில் மூழ்கிய 2 மீனவர்கள் மாயமாகினர். இந்த சம்பவம் குறித்து இந்திய கடற்படையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 9 மீனவர்களையும் கொச்சி துறைமுகத்திற்கு அழைத்துவர கடற்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும், கடலில் மூழ்கி மாயமான எஞ்சிய 2 மீனவர்களை தேடும் பணி நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் இருந்த மீனவர்கள் அனைவரும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

# ஒரே மாதத்தில் ரயில்வேயின் சரக்கு பிரிவு வருவாய் ரூ.14,572 கோடி

**புதுடெல்லி, மார்ச் 9:**

தெற்கு ரயில்வே பயனாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜாபர்அலி கூறியதாவது: இந்திய ரயில்வே துறையானது பயணிகள் கட்டண உயர்வின்றி சரக்குகள் உள்ளிட்டவை மூலம் தனது வருவாயைப் பெருக்கும் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது. அதன்படி, சரக்குகள் கையாளுதல் பிரிவில் பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நிலக்கரி, இரும்பு, உரங்கள், சிமெண்ட், உணவு தானியங்கள் மற்றும் கொள்கலன்கள், வாகனங்களை அதிகளவில் கையாண்டுள்ளது.

நிகழ் ஆண்டில் கடந்த பிப்ரவரியில் மட்டும் தேசிய அளவில் இந்திய ரயில்வே 137.72 மில்லியன் டன் சரக்குகளை எடுத்துச் சென்றுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 3.96 சதவீதம் கூடுதலாக சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

அதன்படி, பிப்ரவரியில் மட்டும் சரக்குகள் கையாளப்பட்டதன் மூலம் ரூ.14,572 கோடி வருவாய் இந்திய ரயில்வே துறைக்கு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 2.97 சதவீதம் கூடுதலாகும். சரக்குகள் கையாளுதலை இன்னும் கூடுதலாக்க சரக்கு ரயில்களுக்கு தனிப்பாதைகள் அமைத்தல், சரக்குப் பெட்டிகளைக் கூடுதலாக்குதல் உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த ரயில்வே துறை திட்டமிட்டுள்ளது என்றார்.

# தெலுங்கானா: முதல்-மந்திரி முன் 130 மாவோயிஸ்டுகள் சரண்

**ஐதராபாத், மார்ச் 9:**




தெலுங்கானாவில் ஐதராபாத் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் 130 மாவோயிஸ்டுகள் தங்களிடமுள்ள ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்து விட்டு, முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டியின் முன் சரணடைந்தனர்.

அவர்களில் மாநில கமிட்டி உறுப்பினர்கள் 3 பேர், மண்டல கமிட்டி உறுப்பினர் ஒருவர், பிரதேச கமிட்டி உறுப்பினர்கள் 10 பேர், பகுதி கமிட்டி உறுப்பினர்கள் 46 பேர் மற்றும் பிற உறுப்பினர்கள் 70 பேர் என மொத்தம் 130 பேர் 124 வகையான நவீன ரக ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர்.

இதன்பின்னர் அவர்களிடையே முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி பேசும்போது, மத்திய கமிட்டி உறுப்பினர் கணபதி உள்ளிட்ட மாவோயிஸ்டு தலைவர்கள் இயல்பு வாழ்க்கையில் இணைந்து மாநில மறுகட்டமைப்பில் பங்கு பெற வேண்டும் என கேட்டு கொண்டார். ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது என முடிவு செய்து, சரணடைந்த மாவோயிஸ்டுகளை பாராட்டிய அவர், பேச்சுவார்த்தையே ஒரே தீர்வு என வலியுறுத்தியதுடன், சிக்கல்களுக்கு ஜனநாயக நடைமுறையின் அடிப்படையிலேயே தீர்வு காண முடியும் என கூறினார்.

# எரிபொருள் இறக்குமதிக்கு வேறு நாடுகளை தேடும் இந்தியா.. வினியோகம் செய்ய சம்மதம் தெரிவித்த நாடுகள்



**புதுடெல்லி, மார்ச் 9:**

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர் சூழலால், முக்கிய கடல் வழித்தடமான ஹோர்முஸ் ஜலசந்தியில் சரக்கு போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது. எனினும், இந்தியாவுக்கு பெரிய பாதிப்பு இல்லை என்று கூறப்படுகிறது. காரணம், ஹார்முஸ் வழியாக மட்டும் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவை வருவதில்லை. ரஷியா, மேற்கு ஆப்ரிக்கா, அமெரிக்கா மற்றும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்தும் தடையின்றி எரிசக்தி கிடைப்பதை இந்தியா உறுதி செய்துள்ளது.

இந்தியாவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று மத்திய அரசு ஏற்கனவே தெரிவித்துள்ளது. இதற்காக எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில், "இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் 40 சதவீதம் மட்டுமே ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக வருகிறது.

மீதி 60 சதவீதம், இதர வழித்தடங்கள் வழியாக வருகிறது. அந்த வழித்தடங்களில் எந்த பாதிப்பும் இல்லை. அதனால்தான் சர்வதேச தட்டுப்பாடு காலங்களிலோ அல்லது கொரோனா காலத்திலோ கூட இந்திய வாடிக்கையாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை.

தற்போது, ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுக்கு கூடுதலாக எரிவாயு வினியோகம் செய்ய முன்வந்துள்ளன. நீண்டகால எரிபொருள் வினியோகத்துக்காக அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நட்பு நாடுகளுடன் புதிய எரிபொருள் வினியோக ஒப்பந்தங்களை இந்தியா செய்து கொண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகளின் எண்ணிக்கை 27-ல் இருந்து 40 ஆக அதிகரித்துள்ளது. எரிபொருள் வினியோகத்துக்கு ஒரே வழித்தடத்தை சார்ந்திருக்கும் காலம் முடிந்து விட்டது. 'தேசநலன்' என்ற ஒரே கொள்கை அடிப்படையில்தான் எரிபொருள் இறக்குமதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கச்சா எண்ணெய் எங்கு கிடைக்கிறதோ, எங்கு மலிவு விலையில் கிடைக்கிறதோ அங்கு வாங்குகிறோம். தொடர்ந்து அப்படியே வாங்குவோம். இதுதான் எங்களது உறுதியான நிலைப்பாடு" என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# அருணாச்சல பிரதேசத்தில் அடுத்தடுத்து 3 முறை நிலநடுக்கம் - மக்கள் பீதி

**புதுடெல்லி, மார்ச் 9:**




அருணாச்சல பிரதேசம் மேற்கு காமெங் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நள்ளிரவு 11.55 மணியளவில் ரிக்டர் அளவில் 3.1 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, அருணாச்சல பிரதேசத்தின் மேற்கு காமெங் பகுதியிலும் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் நேற்று அதிகாலை 1.10 மணிக்கு ரிக்டர் 2.7 அளவில் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அருணாச்சல பிரதேசத்தின் பிச்சோம் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இன்று காலை 5.48 மணியளவில் ரிக்டர் அளவில் 2.8 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளது, அருணாச்சல பிரதேசத்தில் அடுத்தடுத்து மூன்று முறை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை. முன்னதாக, ராஜஸ்தானில் ரிக்டர் 3.5 அளவில் நேற்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கேரள மாநில அரசு வேலை வாய்ப்பில் திருநங்கைகளுக்கு 1% இடஒதுக்கீடு!

**திருவனந்தபுரம், மார்ச் 9:**

கேரளத்தில் தற்போது உள்ள இடஒதுக்கீட்டு முறையில் திருநங்கைகளுக்கு 1% இடஒதுக்கீடு வழங்குமாறு திட்ட அறிக்கை ஒன்றை மாநில அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அம்மாநில சமூக நீதித்துறை சமர்ப்பித்துள்ளது. கேரள உயர் நீதிமன்றம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் திருநங்கைகளுக்கான இடஒதுக்கீட்டை உறுதிப்படுத்துமாறு அம்மாநில அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. முன்னதாக, கடந்த 2014 ஆம் ஆண்டு இதே போன்ற உத்தரவை உச்ச நீதிமன்றமும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குப் பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவின்படி, மாநில அரசுப் பணியாளர் தேர்வில் தகுதி பெற்ற மூன்று திருநங்கைகளை அந்தந்தப் பிரிவுகளின் கீழ் நியமிக்கக் கூடுதல் பதவிகளை உருவாக்கியிருந்தது. இதைத்தொடர்ந்து, முறையான இடஒதுக்கீட்டுக் கட்டமைப்பு செயல்படுத்தப்படும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்று அம்மாநில அரசு தெரிவித்திருந்தது. இந்த நிலையில், முறையான இடஒதுக்கீட்டுக்கான திட்ட அறிக்கை மாநில அமைச்சரவையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என கேரள சமூக நீதித்துறை அமைச்சர் ஆர். பிந்து தெரிவித்துள்ளார். சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மூன்றாம் பாலினத்தவரின் முன்னேற்றத்துக்கு இது போன்ற திட்டங்கள் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசிய நெடுஞ்சாலை சுங்கச் சாவடிகளில் 5,100 பெண் ஊழியர்கள் நியமனம்

**புதுடெல்லி, மார்ச் 9:**

பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன்பு, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன் விரிவான ஆலோசனைகள் நடத்தப்பட்டன. அதன் அடிப்படையில், சுங்கச்சாவடிகளில் பகல் நேரப் பணிகளில் பெண் ஊழியர்களை நியமிக்க ஒப்பந்ததாரர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர். தற்போது முதல் கட்டமாக 5,100-க்கும் மேற்பட்ட பெண்கள் பணியில் சேர்ந்துள்ளனர். குறிப்பாக, கிராமப்புறங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் சுங்கச்சாவடிகளைத் திறம்பட நிர்வகித்தல் உள்பட முறையான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.




# சென்னை: கொத்தவால்சாவடியில் சாக்லேட் பெட்டி திருடியவர் கைது

**கொத்தவால்சாவடி, மார்ச்.9:** கொத்தவால்சாவடி வரத முத்தையப்பன் தெருவில் ரத்தன் லால் (43) என்பவர் மளிகைக் கடை நடத்துகிறார். கடந்த 6ம் தேதி காலை அவரது கடைக்கு வந்த மீன்பாடி வண்டியில் இருந்து சரக்குகளை லோடு மேன் சரவணன் இறக்கிக் கொண்டிருந்தார்.

அப்போது, வண்டியில் இருந்த சுமார் ரூ.9 ஆயிரம் மதிப்புள்ள ‘கிட்கேட்’ சாக்லேட் பெட்டி மாயமானது. ரத்தன்லால் கொடுத்த புகாரின் பேரில், அப்பகுதியில் இருந்த சிசிடிவி காட்சிகளை கொத்தவால்சாவடி போலீஸார் ஆய்வு செய்தனர்.

அதன் மூலம், சாக்லேட் பெட்டியை திருடியது பழைய வண்ணாரப் பேட்டையைச் சேர்ந்த யுவராஜ் (36) என்பது தெரியவந்தது. அவரை கைது செய்த போலீஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். அவரிடம் இருந்து கிட்கேட் சாக்லேட் பெட்டி மீட்கப்பட்டது.

# சிவகங்கை: காவல் ஆய்வாளரை தாக்க முயன்ற பிரபல ரவுடி சுட்டுப்பிடிப்பு

**சிவகங்கை, மார்ச்.9:** சிவகங்கை மாவட்டம் திருப்பாச் சேத்தி அருகே தன்னை தாக்க முயன்ற ரவுடியை, காவல் ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தார்.

சிவகங்கை அருகே மாத்தூரைச் சேர்ந்த ‘ஏ பிளஸ்’ சரித் திரப் பதிவேடு குற்றவாளி ஊர்காவலன் (31). தற்போது மிக் கேல்பட்டினத்தில் வசிக்கிறார். இவர் மீது 3 கொலை வழக்கு கள், 2 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 33 வழக்குகள் நிலுவையில் உள்ளன. திருப்பாச்சேத்தி காவல் நிலையத் தில் நிலுவையிலுள்ள 3 வழக்குகளுக்காக ஊர்காவலனை போலீஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் அவர் திருப்பாச்சேத்தி அருகே கானூர் மயானப் பகுதியில் பதுங்கியிருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. அங்கு சென்ற ஆய்வாளர் குமரவேல் பாண்டியன் தலைமையிலான போலீஸார் ஊர்காவலனை கைது செய்ய முயன்றனர்.

ஆனால், அவர் காவல் ஆய்வாளரை ஆயதங்களால் தாக்க முயன்றதாகக் கூறப்படுகிறது. எச்சரிக்கும் வகையில் ஆய்வாளர் துப்பாக்கியால் வானை நோக்கிச்சுட்டார். அப் போதும் ஊர்காவலன் தாக்க முயற்சித்ததால், ஆய்வாளர் குமரவேல்பாண்டியன் துப்பாக்கியால் சுட்டதில் ஊர் காவலனின் வலது காலில் குண்டு பாய்ந்தது.

காயமடைந்த அவருக்கு திருப்புவனம் அரசு ஆரம்ப சுகா தார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் தீவிர சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் குறித்து சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் விசாரணை நடத்தி வருகிறார்.

# கோவை கல்லூரி மாணவி பாலியல் வழக்கில் 3 பேருக்கு சாகும் வரை சிறை – முழு விவரம்

**கோவை, மார்ச்.9:** கோவையில் கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில், கைது செய்யப்பட்ட மூவருக்கும் சாகும் வரை சிறை தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பளித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த 21 வயதான மாணவி, கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் முதுகலை பாடப்பிரிவில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். கடந்த ஆண்டு நவ.2-ம் தேதி இரவு மாணவியும், அவரது நண்பரான கோவையில் ஆட்டோ மொபைல் கடை நடத்தி வரும் 25 வயது இளைஞரும் பீளமேடு விமான நிலையம் பின்புறம் உள்ள பிருந்தாவன் நகரில் உள்ள காலியிடத்தில் காரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த 3 பேர், தங்களிடம் இருந்த ஆயுதத்தால், அந்த இளைஞரை தாக்கிவிட்டு, மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பினர்.

பீளமேடு போலீஸார் வழக்குப்பதிந்து, இதில் தொடர்புடையவர்களைப் பிடிக்க 7 தனிப்படைகள் அமைத்தனர். இதன்படி 3 பேரை கோவை வெள்ளக்கிணறு பகுதி அருகே நவ.3-ம் தேதி போலீஸார் சுட்டுப்பிடித்து கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சதீஷ் என்ற கருப்புசாமி, கார்த்திக் என்ற காளீஸ்வரன், மதுரை கருப்பாயூரணியைச் சேர்ந்த குணா என்ற தவசி எனத் தெரியவந்தது.

இந்த வழக்கு விசாரணை கோவை அனைத்து மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நீதிபதி சுந்தரராஜ் வழக்கை விசாரித்தார். 112 சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர். 72 பேர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். சம்பவம் நடைபெற்று 4 மாதங்களில் இந்த வழக்கின் விசாரணை துரிதமாக நடைபெற்றது.

இந்நிலையில், நேற்று நீதிபதி சுந்தரராஜ், குற்றச்சாட்டை உறுதி செய்து மூவரையும் குற்றவாளிகள் என அறிவித்து, அவர்களுக்கு வாழ்நாள் (சாகும் வரை) சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார். பின்னர், மூவரும் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். தண்டனை பெற்றவர்களில் கருப்புசாமி, காளீஸ்வரன் ஆகிய இருவருக்கும் ஏற்கெனவே பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்பு இருப்பது குறிப்பிடத்தக்கது.

சட்டப்பிரிவுகளுக்கு ஏற்ப தண்டனை விவரம் வழங்கப்பட்டுள்ளதாக அரசு வழக்கறிஞர் பி.ஜிஷா தெரிவித்தார். இதுகுறித்து மேலும் அவர் கூறியதாவது: இந்த வழக்கில் மூவருக்கும் பிஎன்எஸ் சட்டப்பிரிவு 324(4)-க்கு (இழப்பு விளைவித்தல்) 2 ஆண்டு சிறை தண்டனை, ரூ.500 அபராதம், 309(4)-க்கு (கொள்ளை) 10 ஆண்டு சிறை தண்டனை, ரூ.500 அபராதம், 311-பிரிவுக்கு (ஆயுதம் காட்டி கொள்ளை) 7 ஆண்டு, 74-வது பிரிவுக்கு (மானபங்கம் செய்தல்) 1 ஆண்டு, ரூ.500 அபராதம், 76-வது பிரிவுக்கு (நிர்வாணப்படுத்துதல்) 3 ஆண்டு சிறை, ரூ.500 அபராதம், 127(2) பிரிவுக்கு (அடைத்து வைத்தல்) 1 ஆண்டு, 70(1) (கூட்டு பாலியல் வன்கொடுமை) பிரிவுக்கு வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பிப்.2 அன்று விசாரணை தொடங்கியது. பிப்.23 அன்று விசாரணை முடிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.7 லட்சம், அவரது ஆண் நண்பருக்கு ரூ.2 லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார்.

# சென்னை சென்ட்ரல் - கும்மிடிப்பூண்டி ரயில் சேவையில் மாற்றம்

**சென்னை, மார்ச்.9:** சென்னை சென்ட்ரல் - கூடூர்மார்க் கத்தில் மீஞ்சூர் - பொன்னேரி இடையே பொறியியல் பணி நடக்க உள்ளதால், சென்னை- கும்மிடிப்பூண்டி இடையே மின்சார ரயில் சேவை மார்ச் 10, 12 ஆகிய தேதிகளில் ரத்து செய்யப்பட உள்ளது.

அதன் விவரம் வருமாறு: சென்னை சென்ட்ரல் - கும்மிடிப் பூண்டிக்கு மார்ச் 10, 12 ஆகிய தேதிகளில் இரவு 11.20 மணிக்கு புறப்படும் ரயில், மீஞ்சூர் - கும்மிடிப்பூண்டி இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளது.

கும்மிடிப்பூண்டி-சென்னை சென்ட்ரலுக்கு மார்ச் 11, 13 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.50 மணிக்கு புறப்பட வேண்டிய மின்சார ரயில், கும்மிடிப்பூண்டி - மீஞ்சூர் இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளது.

மின்சார ரயில் ரத்து: அரக்கோணம் - ஜோலார் பேட்டை மார்க்கத்தில் பச்ச குப்பம் யார்டில் பொறியியல் பணி நடக்க உள்ளதால், மெமு ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

அதன்படி, காட்பாடி - ஜோலார்பேட் டைக்கு இன்று காலை 9.30 மணிக்கு இயக்கப்படும் மெமு ரயில், ஜோலார்பேட்டை - காட்பாடிக்கு இன்று நண்பகல் 12.15 மணிக்கு இயக்கப்படும் ரயில் ஆகிய 2 ரயில்களும் ரத்து செய்யப்பட உள்ளன. இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆகம விதிகள்படி காஞ்சிபுரம் வரதர் கோயிலில் குடமுழுக்கு பணிகள் நடைபெறுகிறதா? - ஐகோர்ட்



**காஞ்சிபுரம், மார்ச்.9:** காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் குடமுழுக்குக்கான சீரமைப்பு பணிகள் ஆகம விதிகளின்படி நடைபெறுகிறதா என்பதை ஒரு துணைக் குழு அமைத்து ஆய்வு செய்ய மாநில அளவிலான நிபுணர் குழுவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலில் குடமுழுக்கு என்ற பெயரில் ஆகம விதிகளை மீறி கட்டுமான மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்புதல்களை சமர்ப்பிக்க அறநிலையத் துறைக்கு உத்தரவிடக் கோரி. அந்தக் கோயிலை கட்டிய மன்னரின் வாரிசு என்ற அடிப்படையில் கர்நாடகாவைச் சேர்ந்த கிருஷ்ண தேவராயா என் பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.கே.ஸ்ரீனிவாசன், “குடமுழுக்கு என்ற பெயரில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த கோயிலில் புராதன ஆணையத்தின் அனுமதியின்றியும், மாநில அளவிலான நிபுணர் குழுவின் ஒப்புதல் பெறாமலும் அறநிலையத்துறை கட்டுமானப் பணிகளை மேற் கொண்டு வருகிறது. குறிப்பாக கருவறைக்கு செல்ல மரத்தால் ஆன 6 படிகள் ஏற்கெனவே இருந்த நிலையில், தற்போது ஆகம விதிகளுக்கு புறம்பாக 10 படிகளாக மாற்றப்பட்டுள்ளது. கோயிலின் மேற்கூரையில் தங்க பல்லி இருந்த நிலையில் மேற்கூரை உயரத்தை குறைத்து ஃபால்ஸ் சீலிங் அமைக்கப்பட்டு, அதன் கீழ் தங்க பல்லி பொருத்தப்பட்டுள்ளது. இதுபோல பல்வேறு பணிகள் ஆகம விதிகளுக்கு முரணாக நடைபெற்று வருகிறது” என குற்றம் சாட்டினார்.

பதிலுக்கு தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் மற்றும் அறநிலையத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராஜன் ஆகியோர், “பிரசித்தி பெற்ற இந்த கோயிலில் குடமுழுக்கு பணிகளை மேற்கொள்ளும் முன்பாக தொல்லியல் துறைத் தலைவர், மாநில அளவிலான நிபுணர் குழுவினர், ஆகம நிபுணர்கள் உள்ளிட்டோருடன் பல்வேறு ஆலோசனை கூட்டங்களை நடத்திய பிறகே இப்பணிகள் நடந்து வருகின்றன.


3 மாதங்களாக பணிகள் முடக்கம்: கோயில் படிகளின் உயரம் ஒன்றரை அடியாக இருப்பதால் அதில் ஏற சிரமப்படும் பக்தர்களின் வசதிக்காக சாய்வுதளம் அமைக்க ப்பட்டுள்ளது. படிகளில் ஏறிச்சென்று தரிசனம் மேற்கொள்ளும் பக்தர்களையும் தடுக்கவில்லை. தங்கப் பல்லியின் உயரம் குறைக்கப்பட்டிருப்பது ஆகம விதிகளுக்கு எதிரானது அல்ல. கோயிலின் தொன்மை மாறாமல் சுவரோவியங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே 90 சதவீத பணிகள் முடிவடைந்து விட்ட நிலையில், கடந்த 3 மாதங்களாக எந்தப் பணியும் மேற்கொள்ளப்படா மல் முடங்கிக் கிடக்கிறது” எனக்கூறி அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, “கோயிலின் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள் ஆகம விதிகளின்படி நடைபெறுகிறதா என்பதை மாநில அளவிலான நிபுணர் குழு ஒரு துணைக் குழுவை அமைத்து ஆய்வு செய்ய வேண்டும். அந்த குழுவில் ஆகமம் மற்றும் தொல்லியல் துறை நிபுணர்கள் இடம் பெற வேண்டும். ஆய்வு செய்யும் தேதியை முன்னதாக நிர்ணயித்து கோயிலில் அறிவிப்பு செய்ய வேண்டும். இந்த குழு அனைத்து தரப்பு ஆட்சேபங்களையும் ஆய்வு செய்து, எந்தெந்த பணிகளை தொடரலாம்.

எவற்றை தொடரக்கூடாது, எதை மாற்றி அமைக்கலாம் என மாநில அளவிலான குழுவுக்கு பரிந்துரைக்க வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில், எந்தெந்த பணிகளை தடையின்றி தொடரலாம் என்பது குறித்து மாநில நிபுணர் குழு தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும்” எனக் கூறி வழக்கை முடித்து வைத்துள்ளார்.

# பரங்கிமலை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் 156 பேருக்கு ராணுவப் பயிற்சி நிறைவு

**பரங்கிமலை, மார்ச்.9:** ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் 156 பேருக்கு பயிற்சி நிறைவு பெற்றது. இதில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு வீரவாள், பதக்கங்கள் வழங்கப்பட்டன.





பரங்கிமலையில் ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு ராணுவப் பணியில் சேரும் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி மையத்தில் இந்திய நாட்டைச் சேர்ந்த இளம் அதிகாரிகள் மட்டுமின்றி நட்பு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.


இந்த மையத்தில், 11 மாத பயிற்சி பெற்ற 121 ஆண், 35 பெண் ஆகிய 156 பேருக்கு பயிற்சி நிறைவு விழா. அணி வகுப்பு விழா நேற்று ஓடிஏ வளாகத்தில் பரமேஸ்வர் திடலில் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளில் மேற்கு கட்டளைப் பிரிவின் தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் குமார் கட்டி யார், ராணுவ பயிற்சி மையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் மைக்கேல் ஏ.ஜே பெர்னாண் டஸ் பங்கேற்று பயிற்சி நிறைவு செய்த ராணுவ அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

பின்னர் சிறப்பு அணி வகுப்பு நடத்திய அணிகளுக்கு தங்கம். வெண்கல பதக்கம், சிறப்பு வாள் போன்றவற்றை வழங்கினர். இதையடுத்து பயிற்சி முடித்த அதிகாரிகள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் ராணுவ அதிகாரிகள். அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியின்போது இளம் ராணுவ அதிகாரிகளின் தோள்பட்டையில் மூடி வைக்கப்பட்டிருந்த நட்சத்திர சின்னத்தை, அவர்களது பெற்றோர் திறந்து வைத்து, அவர்களை நாட்டுக்கு அர்ப்பணித்தனர். பின்னர் ஒவ்வொரு அணியாக பிரிந்து தரையில் படுத்து தாய் மண்ணை முத்தமிட்டனர்.

பயிற்சி முடித்த அனைவரும் சில நாட்களில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பணியில் சேர உள்ளனர். 49 வாரங்கள் இணைந்து பயிற்சி பெற்றவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்கு செல்ல உள்ளதால், பிரியா விடை பெற்றுக்கொண்டனர். வெளிநாடுகளைச் சேர்ந்த (பூட்டான், தான் சானியா) 2 ஆண் மற்றும் 2 பெண் அதிகாரிகள் தங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தனர்.

# ‘பாரதியார் இல்லம்’ வலைதளப் பக்கம் - இன்ஸ்டாகிராமில் தமிழக அரசு தொடக்கம்




**சென்னை, மார்ச்.9:** பாரதியார் குறித்து இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக இன்ஸ்டாகிராமில் ‘பாரதியார் இல்லம்’ புதிய வலைதள பக்கத்தை தமிழக அரசு தொடங்கியுள்ளது.

பெண்களின் உரிமை, சமத்துவம் மற்றும் சுதந்திரத்துக்காக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கவிதை வாயிலாக உரத்த குரல் கொடுத்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். கவிஞராக மட்டுமின்றி, விடுதலைப் போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாவும் திகழ்ந்தவர். குறிப்பாக, பெண்கள் விடுதலை, சாதி ஒழிப்பு, தேச பக்தி போன்ற உயரிய சிந்தனைகளைத் தனது படைப்புகள் மூலம் விதைத்தவர்.

“அச்சமில்லை அச்சமில்லை”, “வந்தே மாதரம்” போன்றவை அவரது காலத்தால் அழியாத பாடல்கள். பாரதியார் தனது இறுதி நாட் களை சென்னை திருவல்லிக் கேணி பார்த்தசாரதி கோயில் அருகில் உள்ள இல்லத்தில் கழித்தார். தமிழக அரசு ‘பாரம் தியார் நினைவு இல்லமாக’ அதை சிறப்பாகப் பராமரித்து வருகிறது.

அதேபோல, அவர் வாழ்ந்த எட்டயபுரம் மற்றும் வாராணசி இல்லங்களும் அரசின் மூலம் நினைவு இல்லங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் பாரதி யாரின் வாழ்க்கை குறிப்புகள், அரிய புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாரதியாரின் சிந்தனைகளையும், அவரது வாழ்க்கை வரலாற்றையும் இன்றைய தலைமுறையினரும், இளைஞர்களும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், தமிழக அரசின் செய்தித் துறை சார்பில் ‘பாரதியார் இல்லம்’ என்ற புதிய இன்ஸ்டாகிராம் வலைதளப் பக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பாரதியாரின் கவிதைகள், அரிய வரலாற்றுக் குறிப்புகள், இதுவரை பலரும் பார்த்திராத புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட உள்ளன.

# தமிழகம் முழுவதும் ரூ.125 கோடியில் தூர்வாரும் பணி: அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைத்தார்



**சென்னை, மார்ச்.9:** தமிழகத் தில் 13 லட்சம் ஏக்கர் விவ சாய நிலங்கள் பயன்பெறும் வகையில் ரூ.125 கோடி மதிப் பீட்டிலான சிறப்பு தூர் வாரும் பணிகளை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுரு கன் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் விவசாயப் பணிகள் தடையின்றி நடை பெறவும், நீர்நிலைகளை முறை யாகப் பராமரிக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நேற்று சென் னையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச் சர் துரைமுருகன் பெரிய அளவிலான தூர்வாரும் திட் டத்தைத் தொடங்கி வைத் தார். 13 டெல்டா மாவட்டங் கள் மற்றும் மதுரை, கோவை மண்டலங்களைச் சேர்ந்த 11 மாவட்டங்கள் என மொத் தம் 24 மாவட்டங்களில் இப் பணிகள் நடைபெறவுள்ளன.

சுமார் 5,954.94 கி.மீ நீளத் துக்கு ஆறுகள், கால்வாய் கள், ஏரிகள் மற்றும் வடி கால்கள் தூர்வாரப்பட உள் ளன. ரூ.125 கோடி மதிப்பீட் டில் மேற்கொள்ளப்படும் இப்பணிகள் மூலம் சுமார் 13 லட்சம் ஏக்கர் நிலங்கள் நேரடிபாசன வசதி பெறும். தூர்வாரும் பணிகளுடன் சேர்த்து, வேலூர் மாவட் டத்தில் சுமார் ரூ.70 கோடி மதிப்பீட்டிலான புதிய கட் டுமானப் பணிகளுக்கும் அமைச்சர்துரை முருகன் அடிக்கல் நாட்டினார்.

அந்தவகையில், வேலூர் மாவட்டம் காட்பாடி அம் மூண்டி கிராமம் அருகே ரூ.46.44 கோடி செலவில் புதிய தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இதன்மூலம் 600.80 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும். மேலும், காட் பாடி வெப்பாலை கிராமம் அருகே ரூ.23.08 கோடி செல வில் புதிய தடுப்பணை கட் டவும் அடிக்கல் நாட்டப் பட்டது. இதன் மூலம் 600 ஹெக்டேர் நிலங்கள் பயன் பெறும்.

நிகழ்ச்சியில் அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது: ஜூன் மாதம் மேட்டூர் அணை பாசனத்துக்காகத் திறக்கப்படும் போது, தண்ணீர் எவ்விதத் தடையுமின்றி கடைமடைப் பகுதி வரை சென்றடைய வேண்டும். விவசாயிகளின் நலன் கருதி, முன் எப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டு தூர்வாரும்பணிகள் முன்கூட்டியே தொடங்கப் பட்டுள்ளன.

பொறியாளர்கள் இந்தப் பணிகளைச் செவ்வனே கண் காணித்து, குறித்த காலத்துக் குள் தரமாக முடித்து மக் கள்பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். இவ்வாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வில் நீர்வளத் துறைச் செயலாளர் ஜெ.ஜெய காந்தன், தலைமைப் பொறி யாளர் (பொது) சு.கோபால கிருஷ்ணன் மற்றும் உயர் அதி காரிகள் கலந்து கொண்டனர்

# மதுரை - கொல்லம் 4 வழிச்சாலை: வடுகபட்டி - ராஜபாளையம் இடையிலான 36 கி.மீ. சாலை ஏப்ரலில் திறப்பு



**மதுரை, மார்ச்.9:** மதுரை-கொல்லம் நான்கு வழிச் சாலை திட்டத்தில் வடுகப்பட்டி - ராஜபாளையம் இடையேயான 35.6 கிலோ மீட்டர் சாலை ஏப்ரலில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாமல் அமைக்கப்படுவதாக தேசிய நெடுஞ் சாலை ஆணைய அதிகாரிகள் தெரி வித்தனர்.

மதுரை-கொல்லம் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக (என்.ஹெச்744) தரம் உயர்த்த 2022 ஜனவரியில் அரசாணை வெளியிடப்பட்டது. முதற்கட்டமாக திரு மங்கலம்-ராஜபாளையம் இடையே 71.6 கிலோ மீட்டர் தொலைவுக்கு நான்கு வழிச்சாலை அமைக்க ரூ.1,318 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 2023 மார்ச் மாதம் பணிகள் தொடங்கியது.

இதில் திருமங்கலம்-வடுகப்பட்டி (36 கி.மீ), வடுகபட்டி - ராஜபாளையம் (35.6 கி.மீ) 2 பிரிவுகளாக பிரித்து பணிகள் நடைபெற்று வருகிறது. வடுகப்பட்டி - ராஜபாளையம் பிரிவில் கிருஷ்ணன்கோவில் வரை தற்போதைய சாலையே நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்யப்பட்டு உள்ளது.

கிருஷ்ணன்கோவில் - ராஜபாளையம் இடையே 27 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிதாக நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 2 ரயில்வே மேம்பாலங்கள், 1 மேம்பாலம், 19 பாலங்கள், சிறிய வாகனங்கள் மற்றும் மக்கள் செல்லும் வகையில் 16 சுரங்கப்பாதை, 62 நீர்வழிப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த சாலையில் நத்தம்பட்டியில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. சாலை அமைக்கும் பணிகள் 99.7 சதவீதம் முடிவடைந்த நிலையில், ஏப்ரல் மாதம் வடுகப்பட்டி-ராஜபாளையம் இடையேயான நான்கு வழிச்சாலை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய நாகர்கோவில் மண்டல திட்ட இயக்குநர் சச்சின் குமார் மிஸ்ரா கூறியதாவது: மதுரை-கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் தொடர் விபத்துகள் ஏற்படும் அதிக கரும்புள்ளி பகுதிகள் உள்ள நிலையில், நான்கு வழிச் சாலையில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாமல், ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு கண்காணிப்பு கேமரா அமைத்து நவீன போக்குவரத்து மேலாண்மை அமைப்பு மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்த அமைப்பு டோல்கேட்டில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும். இதன்மூலம் விபத்து ஏற்பட்டால் தேவையான அனைத்து உதவிகளும் உடனடியாக மேற்கொள்ளப்படும். இந்த சாலையில் உள்ள அனைத்து குறுக்கு சாலைகளிலும் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்டர் மீடியன் கிராஸிங் இல்லாததால் 2 கிலோ மீட்டருக்கு ஒரு குறுக்கு பாலம் அமைக்கப்பட்டு உள்ளது. ராஜபாளையம் அருகே எஸ்.ராமலிங்காபுரம் பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

ஓராண்டுக்கு முன்னரே முடிய வேண்டிய பணிகள், ரயில்வே மேம்பால அனுமதி தாமதத்தால்தாமதம் ஆகிவிட்டது. நத்தம்பட்டி டோல்கேட் ஏப்ரலில் திறக்கப்பட்டு, சாலை முழுமையாக பயன்பாட்டுக்கு வரும் வரை குறைவான கட்டணம்வசூல் செய்யப்படும். கட்டணம் குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

இந்த சாலையில் 8 இடங்களில் சாலையின் அனைத்து தகவல்கள், உதவி எண்கள் அடங்கிய கியூஆர் கோடு வைக்கப்பட உள்ளது. சாலையில் பாலம் மற்றும் அணுகுசாலை உள்ள பகுதியில் 16 கி.மீ. தொலைவுக்கு மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் சோதனை முயற்சியாக 2 கிலோ மீட்டருக்கு பிளாஸ்டிக் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 15-ல் இந்த சாலை மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். திருமங்கலம்-வடுகபட்டி இடையேயான சாலை ஜூன் மாதம் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

இந்த சாலையில் அதிகபட்சமாக 100 கிலோ மீட்டர் வேகம் வரை பயணிக்கலாம். இந்த சாலை முழுமையாக பயன்பாட்டுக்கு வந்தால் மதுரை-ராஜபாளையம் பயண நேரம் 1 மணி நேரமாக குறையும். அடுத்த கட்டமாக ராஜபாளையம்-புளியரை இடையே 70 கி.மீ. தொலைவுக்கு நான்குவழிச்சாலை அமைக்கும் பணிகள் ஓராண்டுக்குள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிவகங்கை மாவட்டத்தில் 34 வழக்குகளில் தேடப்பட்டவர் சுட்டுப்பிடிப்பு






**சிவகங்கை, மார்ச்.9:** சிவகங்கை மாவட்டத்தில் 34 வழக்குகளில் தேடப்பட்டவரை போலீசார் சுட்டுப் பிடித்துள்ளனர். மிக்கேல் பட்டினத்தைச் சேர்ந்த ஊர்க்காவலன் என்பவரை நீதிமன்ற உத்தரவுப்படி போலீசார் பிடிக்க சென்றுள்ளனர்.

ஊர்க்காவலன் கானூர் சுடுகாடு பகுதியில் பதுங்கியிருந்ததாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

போலீசார் அங்கு சென்ற நிலையில் ஊர்க்காவலன் போலீசாரை தாக்கிவிட்டு தப்பியோட முயற்சித்துள்ளார். அப்போது போலீசார் ஊர்க்காவலனை துப்பாக்கியல் சுட்டு பிடித்துள்ளனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் செப்.17-ம் தேதி கும்பாபிஷேகம்



**சென்னை, மார்ச்.9:** உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கும்பாபிஷேக விழா, வரும் செப் .17-ம் தேதி கோலாகலமாக நடைபெறும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.


சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் கோயில் அறங்காவலர்கள், ஆகம வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது: மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கடைசியாக கடந்த 2009-ம் ஆண்டு ஏப்.8-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது 17 ஆண்டுகளுக்குப் பிறகு, வருகிற செப்.17-ம் தேதி காலை 7.45 மணி முதல் 8.10 மணிக்குள் கும்பாபிஷேக பெருவிழா நடைபெறவுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், கோயிலைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மொத்தம் 186 வகையான திருப்பணிகள், கோயில் நிதி மற்றும் உபயதாரர் நிதி என மொத்தம் ரூ.32.28 கோடி மதிப்பீட்டில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. கடந்த 2018-ல் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வீரவசந்தராயர் மண்டபத்தை, அதன் பழமை மாறாமல் மீட்க ரூ.35.30 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த மண்டபத்தின் புனரமைப்புப் பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடைய உள்ளன.

மீனாட்சி அம்மன் கோயிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்களும், உற்சவங்களும் நடைபெறுவதால் அவற்றை நிறுத்த இயலாது. எனவே, திருப்பணிகள் மார்ச் மாதமே முடிவடைந்தாலும், கும்பாபிஷேகத்தை வரும் செப்.17-ம் தேதி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வுக் கூட்டத்தில்துறை செயலர் க.மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர் மற்றும் அறங்காவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மேகேதாட்டு அணை கட்டும் முயற்சியை தடுக்க நடவடிக்கை: கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்



**சென்னை, மார்ச்.9:** ‘கர்நாடகா மாநிலம் மேகேதாட்டுவில் அணை கட்டும் முயற்சியை தமிழக அரசு தடுக்கநடவடிக்கை எடுக்க வேண்டும்’ என அரசியல் கட்சி தலைவர்கள் வலி யுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை: தமிழக விவசாயிகளின் உயிர்நாடியான காவிரி ஆற்றின் குறுக்கே, மேகேதாட்டு அணை கட்ட, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் போவதாக, காங்கிரஸ் அரசு, தனது நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியுடனான தனது கூட்டணியை திமுக உறுதிசெய்த அடுத்த தினமே, கர்நாடக காங்கிரஸ் அரசு இதனை அறிவித்திருப்பது, தனது கூட்டணிக்குள் காங்கிரஸ் கட்சியைத் தக்கவைக்க திமுக அரசு, தமிழக மக்கள் நலனை அடமானம் வைத்திருப்பதை காட்டுகிறது.

தமாகா தலைவர் ஜி.கே. வாசன்: திமுக அரசு காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு உதவும் வகையில் செயல்பட நினைத்தால் அது தமிழக மக்களுக்கும், விவசாயிகளுக்கும் செய்யும் துரோகமாகும். மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசு முயற்சிப்பதை தமிழக அரசு முறியடிக்க வேண்டும்.

அமமுகபொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: மேகேதாட்டு அணை விவகாரத்தில் திமுக, தன்னுடைய கட்சி நலனுக்காகவும், கூட்டணி நலனுக்காகவும் மாநிலத்தின் உரிமைகளையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் அழிக்க முற்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கர்நாடக அரசின் முயற்சியை சட்டரீதியாக மட்டுமின்றி, தன் கூட்டணிக் கட்சியான காங்கிரசுக்கு அரசியல்ரீதியாகவும் உரிய அழுத்தம் கொடுத்து தடுத்து நிறுத்திட வேண்டும்.

தவாக தலைவர் தி.வேல்முருகன்: தமிழகத்தில் ஏற்கெனவே தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வரும் நிலையில், காவிரி நீரை மேலே சேமித்து வைக்கும் வகையிலான எந்தத் திட்டமும், தமிழகத்தின் உரிமைகளை பாதிக்கும் என்பதை கர்நாடக அரசு புரிந்துகொள்ளவேண்டும். மேகேதாட்டு அணைத் திட்டம் தொடர்பாக, சட்டரீதியான அனைத்து வாய்ப்புகளையும் முழுமையாக பயன்படுத்தி, கடுமையான சட்டப் போராட்டத்தை தமிழக அரசு முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வானிலை: தமிழகத்தில் வெப்ப நிலை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்பு



**சென்னை, மார்ச்.9:** தமிழகத்தில் வெப்ப நிலை நாளை (மார்ச் 8) வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 8) நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டதின் மலை பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

மார்ச் 9-ம் தேதி மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களிலும், 10-ம் தேதி தென் தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 11-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 12, 13 தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை, வழக்கத்தை விட ஒரு சில இடங்களில் நாளை 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியல் கார்னர்

# “எழுதாத பேனாவுக்கு ரூ. 82 கோடியில் சிலை எதற்கு?” - திமுகவுக்கு பழனிசாமி கேள்வி



**சென்னை, மார்ச்.9:** எழுதாத பேனாவுக்கு கடலில் ரூ. 82 கோடியில் சிலை வைக்க முயற்சிக்கின்றனர். எழுதாத பேனாவுக்கு சிலை எதற்கு? என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

ஈரோடு மாவட்டம் அந்தியூரில் அதிமுக சார்பில் ‘மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இதில், அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பேசியதாவது: அந்தியூர் விவசாயப் பகுதி. விவசாயத்துக்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கும் அதிமுக என்றும் துணை நிற்கும்.

அதனால் தான் 2016-2021-ல் அதிமுக ஆட்சியின்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடன் ரத்து செய்யப்பட்டது. நீர்நிலைகளை தூர்வாரி, ஏரி மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இந்த திட்டத்தை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டது.

தமிழகத்தில் தற்போது நடைபெறவுள்ள தேர்தல், யார் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கக்கூடிய தேர்தல். 2011-ல் வறட்சிக்காலத்திலும், நிதி நெருக்கடியிலும் மக்களை அதிமுக அரசு பாதுகாத்தது. டெல்டா மாவட்டங்களை புயல் புரட்டிப் போட்டபோது, நிவாரணம் வழங்கி விவசாயிகளை அதிமுக அரசு காத்தது.

இந்தியாவிலேயே கரோனா பரவலை வேகமாக தடுத்தது அதிமுக அரசுதான். தற்போது, ரூ.1 லட்சத்து 36 ஆயிரம் கோடி கூடுதல் வருவாய் இருந்தபோதும், ரூ.5 லட்சம் கோடி கடன் சுமையை இந்த அரசு மக்கள் மீது சுமத்தி உள்ளது. இதை மக்கள் மீது வரியாக திணிப்பார்கள்.

அதிமுக ஆட்சி அமைந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.10 ஆயிரம் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். மத்திய அரசு எங்களுடன்தான் உள்ளது. தேவையான நிதியை கேட்டுப் பெறுவோம்.

அதிமுக ஆட்சிக்கு வந்ததும்,தைப்பொங்கலுக்கு ரேஷன்கார்டுதாரர்களுக்கு ரூ.1,000, தீபாவளி பண்டிகையின்போது பெண்களுக்கு பட்டுச்சேலை வழங்கப்படும். அதிமுக ஆட்சியின்போது, அனைத்து அரசுத் துறைகளிலும் தேசிய விருது கிடைத்தது.

இப்போதைய திமுக ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் நிரம்பியுள்ளது. அதிமுக ஆட்சிக்கு வந்ததும், ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எழுதாத பேனாவுக்கு கடலில் ரூ.82 கோடிக்கு சிலை வைக்க முயற்சித்து வருகின்றனர். எழுதாத பேனாவுக்கு எதற்கு சிலை? அதேபோல, கார் பந்தயத்துக்கு ரூ.100 கோடிக்கு மேல் செலவு செய்துள்ளனர். இதுபோல மக்கள் வரிப்பணத்தை ஊதாரித்தனமாக இந்த அரசு செலவிட்டுள்ளது. ‘உங்க கனவ சொல்லுங்க’ என்ற திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார்.

மக்களின் கனவு, திமுக அரசை அகற்றுவதுதான். அதிமுக ஆட்சி அமைந்ததும் அந்தியூர் தொகுதிக்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களும் கொண்டு வரப்படும். இவ்வாறு அவர்பேசினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் செல்வராஜ், கே.சி.கருப்பணன், பண்ணாரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கூட்டணி குறித்து ஓரிரு நாளில் முடிவு – ராமதாஸ்

**திண்டிவனம், மார்ச்.9:** விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. சார்பில் மகளிர் தின விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கலந்து கொண்டு பேசியதாவது:-

மகளிர் இந்த நாட்டை ஆள வேண்டும். மகளிரை இழிவுப்படுத்திய காலம் சென்று மகளிர் மேம்பாட்டுக்காக மகளிரே முன் வந்து திட்டங்களை தீட்ட வேண்டும். அப்படிப்பட்ட காலம் வர வேண்டும்.

என்னுடைய ஆசை 15 ஆண்டுகள் பெண்களே முதலமைச்சராக வர வேண்டும். 3 முறை பெண்களே முதலமைச்சராக வர வேண்டும். அதே போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் 234 பேரும் பெண்களாக இருக்க வேண்டும்.

அது நடக்குமா? சாத்தியமா? ஆண்கள் விடுவார்களா? சட்டம் இடம் கொடுக்குமா? என பல கேள்விக்குறிகள் மத்தியில் தான் மகளிர் சமூகம் வாழ்ந்து வருகிறது. மகளிர் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் அவரிடம் நிருபர்கள் கூட்டணி தொடர்பாக முடிவு செய்யப்பட்டதா என கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதில் அளிக்கும்போது, இன்னும் ஓரிரு நாட்களில் தெரிய வரும் என்றார்.

நாளை சென்னை உரிமையியல் நீதி மன்றத்தில் வரும் கட்சி தொடர்பான வழக்கு குறித்த கேள்விக்கு நல்லபடியாகவே நடக்கும் என்றார்.

# தி.மு.க. கூட்டணிக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாற்று கூட்டணி உருவாகவில்லை: திருமாவளவன்

**சென்னை, மார்ச்.9:** விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தொகுதி பங்கீடு தொடர்பாக திமுக ஒவ்வொரு கட்சியாக அழைத்து பேசிக் கொண்டிருக்கிறது. எங்களையும் அழைத்து பேசுவார்கள். பேச்சுவார்த்தை சுமூகமாக சென்று கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் அதிர்ச்சியடையும் வகையில் திமுக கூட்டணி கட்டுக்கோப்பாக இருக்கிறது.

நாளுக்குநாள் புதிய கட்சிகள் இணைந்து கூட்டணியை வலிமைப்படுத்தி கொண்டிருக்கின்றன. திமுக கூட்டணிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழகத்தில் இன்னும் மாற்று கூட்டணி உருவாகவில்லை.

தமிழக மக்களின் பேராதரவுடன் திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.

புகழ்பெற்ற நடிகர் என்பதால் ஊடகங்கள் கூடுதலான முக்கியத்துவத்தை தந்து கொண்டு இருக்கின்றன. அவரால் தமிழ்நாடு அரசியல் தலைகீழாக மாறப் போகிறது என்ற தோற்றத்தை திட்டமிட்டே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு மக்கள் மற்ற மாநிலங்களை ஒப்பிட்ட வரைவில் அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்கள். கடந்த காலத்தில் சினிமா என்ற ஒரு மயக்கத்தில் தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்ததுபோல், தற்போதைய சூழ்நிலையில் அப்படி வாக்களிக்க வாய்ப்பு இல்லை.

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com